விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 02 செவ்வாய்க்கிழமை (15.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 117

# உள்ளக விசாரணைகளில் திருப்தியடைய முடியாது!

## சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் -பிரிட்டன்

(லண்டன்)

**இலங்கையில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பிலான உள்ளக விசாரணைகள் குறித்து திருப்தியடைய முடியாது என பிரிட்டன் அமைச்சர் ஷுகோ ஸ்வாயர் தெரிவித்துள்ளார்.**



இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஊடாக

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

போர் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகளில் சிறிதளவு முன்னேற்றமே இலங்கையில் ஏற்பட்டுள்ளது.

எனினும் அங்கு உரிய முறையில் விசாரணைகள் நடத்தப்படவில்லை.

20ஆம் பக்கம் பார்க்க....



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவர் மனைவி முதற்பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ, பிள்ளைகளான நாமல், யோசித, றோகித, சகோதரர் பாதுகாப்புத்துறை அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் உறவினர்களுடன் இணைந்து தங்காலையிலுள்ள அவரது கார்ல்டன் இல்லத்தில் நேற்றையதினம் தமிழ் - சிங்கள புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடியபோது...



## கோபியின் தாயார் விடுதலை

வவுனியா நெடுங்கேணியில் சுட்டுக் கொல்லப்பட்ட கோபியின் தாயார் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக அவருடைய உறவினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

கோபி, தேவியன், அப்பன் ஆகிய மூவருடனும் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த 18 பேர் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. ஆனாலும், இந்த எண்ணிக்கையை அதிகாரபூர்வமாக உடனடியாக உறுதி செய்ய முடியவில்லை.

கொழும்பு தெஹிவளையில் கைது செய்யப்பட்ட, பேக்கரி ஒன்றில் பணியாற்றியவர்கள் என சொல்லப்படுகின்ற 8 பேரும் விடுதலை செய்யப்பட்டவர்களில் அடங்குவார்கள் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (செ-11)

## தீக்குளித்த தமிழ் இளைஞனை நாடு கடத்துவது நிறுத்தி வைப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் கடந்த வாரம் பெற்றோல் ஊற்றிக் தீக்குளித்து, தற்கொலைக்கு முயற்சித்த தமிழ் இளைஞனை நாடு கடத்தும் திட்டம் தற்போது இல்லையென அந்நாட்டுக் குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த இளைஞனுக்கு தற்போது மருத்துவ உதவியே தேவை. அவர் உயிர் பிழைப்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக அவுஸ்திரேலியாவின் குடிவரவு அமைச்சரின் பேச்சாளர் ஸ்காட் மோரிசன் ஏ.எப்.பி செய்திச் சேவைக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

குறித்த இளைஞன், கடந்த 9-ம் திகதி இரவு மேற்கு சிட்னியில் கப்பல் துறைமுகத்திற்கு அருகில் பெற்றோல் ஊற்றித் தன்னைத் தானே தீ மூட்டிக் கொண்டார். இதில் 70 வீதமான தீக்காயங்களுக்கு அவர் உள்ளாகியுள்ளார்.

இந்த நிலையில், ஜனார்த்தனன் என்ற குறித்த இளைஞன், ஆபத்தான நிலையில் கொன்கார்ட் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அவரது நண்பர்கள் வைத்தியசாலைக்கு சென்று பார்த்தபோது, அவர் கண் திறந்ததாகத் தமிழ் அகதிகள் சபை முதல்வரான ட்ரெவர் கிராண்ட் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இளைஞன் பிழைப்ப

20ஆம் பக்கம் பார்க்க....

## மீளவும் புலிகள்? விசாரணை தீவிரம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை மீள இயங்கச் செய்ய முயற்சித்த அரசியல்வாதிகள் குறித்து விசாரணைகளை புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர் என பாதுகாப்பு தரப்பை மேற்கோள் காட்டி கொழும்புத் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட கோபி மற்றும் அவரது உதவியாளர்கள் இருவருடனும் தொடர்புகளைப் பேணிய அரசி யல்வாதிகள், ஏனைய நபர்கள் பற்றிய தகவல்கள் பாதுகாப்பு தரப்பினருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அந்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

20ஆம் பக்கம் பார்க்க....

## இளம்பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்த இளம் பெண்ணொருவரின் சடலத்தை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று பிற்பகல் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில்

20ஆம் பக்கம் பார்க்க....

# வலி வடக்கில் மீள் குடியேற்றம் இனி ஒருபோதும் சாத்தியமில்லை!

## வேறு இடங்களிலேயே காணிகள் வழங்கப்படும் - இராணுவம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதில் இராணுவத்தினர் உறுதியாக உள்ளதையும் காணியற்றவர்களுக்கு அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் வழங்கப்படவுள்ளதையும் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா மீண்டும் ஒரு முறை உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

யாழ். சுன்னாகம் பகுதியிலுள்ள கோணாப்புலம் நலன்புரி நிலையத்திலுள்ள வறுமைக் கோட்டிற்குட்டபட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட

20ஆம் பக்கம் பார்க்க....

## ஊடகவியலாளர் தாக்கப்பட்டார்



(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி பிரதேச ஊடகவியலாளர் மீது இனம் தெரியாத சிலர் கடும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

சிறுப்பிட்டியில் வசிக்கும் குடும்பஸ்தரான சிவஞானம் செல்வதீபன் (வயது 29) என்பவரே இதில் படுகாயங்களுக்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



யாழ்.கலட்டி பிள்ளையார் ஆலயத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் சித்திரத்தேர் வீதிவலம் வருகையில் குடைசாய்ந்து வீழ்ந்தது. இதில் ஆலயக்குருக்கள் படு காயங்களுக்கு இலக்கானர். பின்னர் அங்கு வரவழைக்கப்பட்ட கிறைன் மற்றும் பெக்கோ ரக வாகன உதவியுடன் சித்திரத்தேர் நிமிர்த்தப்பட்டது.

# த.தே.கூட்டமைப்பினருக்கு எதிராக மட்டக்களப்பில் துண்டுப் பிரசுரம்

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களின் பொய்யான வாக்குறுதிகள் எனும் தலைப்பில் மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டிப்பட்டிருக்கின்றன

அந்த துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு கிழக்கு மாகாண மக்களின் காணிகள் தொடர்பாக குரல் எழுப்பும், ஒரே ஒரு அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என மக்களிடம் பொய் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றது.

இவர்களுள் எஸ்.யோகேஸ்வரன், பி.அரியநேத்திரன் மற்றும் பொன்.செல்வராசா ஆகியோர் இன்று கிழக்கு மக்கள் மத்தியில் பொய்க்காரர்களாக விளங்கியுள்ளார்கள்.

ஐயங்கேணி பகுதியிலுள்ள நரசிம்ம வைரவர் கோவிலின் முன்னால் உள்ள காணி தொடர்பாக பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு மக்கள் ஒன்று திரள்வதை அறிந்த எஸ்.யோகேஸ்வரன் உட்பட அவரது பாராளுமன்ற குழுவினர் அந்த இடத்திற்கு சமுகமளித்து வழமைபோல மீட்பாளர்களாக காட்சியளித்தார்கள்.

அன்று படம் ஒட்டிச் சென்றவர்கள், இன்றுவரை ஐயங்கேணி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ, அது குறித்து தேடிப்பார்ப்பதற்கோ இதுவரை முன்வரவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களின், பொய்யான வாக்குறுதிகளையும் ஏமாற்று நாடகங்களையும், நன்றாகப் புரிந்து கொண்டிருக்கும் மக்கள், அதைத் தீர்க்கும் வழியையும் கண்டு விட்டார்கள்.

அதுதான் ஆளும் கட்சியின் கல்குடா அமைப்பாளர் சந்திரபால ஊடாக அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் முன்வைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

ஐயங்கேணி பிரதேசத்தில் ஆளும் கட்சியின் அலுவலகம் ஒன்றைத் திறக்குமாறு அப்பிரதேச மக்கள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் கேட்டுள்ளனர்.


இதன் மூலம் தெரியவருவது, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.யோகேஸ்வரன் உள்ளிட்ட பொய் நடிகர்களை மக்கள் வெறுத்து விட்டார்கள் என்பது புலனாகின்றது.

மக்களிடம் பொய் வாக்குறுதிகளை வழங்கி அப்பாவி மக்களின் பெறுமதியான வாக்குகளை சூறையாடி நாடாளுமன்றத்திற்குள் ஊடுருவியுள்ள இவர்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒருநாளும் முன் வரவில்லை. முன்வரவும் மாட்டார்கள்.

யோகேஸ்வரன் உள்ளிட்ட இவர்கள் சுயநலத்துடனும் சுகபோகத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதே உண்மை.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(செ-11)


ART EXCEL (6 முதல் - 13 வரையுள்ள குழந்தைகளுக்கானது)
காலம் :- 16.04.2014 - 20.04.2014
காலை 8 மணிமுதல் 10.30 வரை

YES ! (Youth empowerment seminar)
(14 முதல் - 17 வயது வரை)
காலம் :- 16.04.2014 - 20.04.2014
காலை 11 மணி முதல் 1.30 வரை

THE ART OF LIVING HAPPINESS PROGRAM
(18 வயதுக்கு மேல்)

அறிமுக உரை
15.04.2014 மாலை 6 மணி
பயிற்சி :- 16.04.2014 முதல் 20.04.2014 வரை
மாலை 5.30 முதல் 8 மணிவரை

அனைத்து பயிற்சிகளும் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெறும்

மேலும் விபரங்களுக்கு :- வாழும் கலை அமைப்பு
(6141) T.P :- 077 100 0750

விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532
valampurii@yahoo.com


# பேக்கரி உற்பத்திகளுக்கு தட்டுப்பாடு நிலவக்கூடும்

(கொழும்பு)

எதிர்வரும் ஓரிரு நாட்களில் பேக்கரி உற்பத்திகளுக்கு தட்டுப்பாடு நிலவக்கூடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.


பேக்கரி தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களில் பெரும்பாலானோர் புத்தாண்டை முன்னிட்டு தத்தமது சொந்த இடங்களுக்கு சென்றுள்ளமையே தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது என அந்த சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவிக்கின்றார்.

இந்த நிலைமையின் கீழ், பேக்கரி உணவு உற்பத்திகள் தற்காலிகமாக தடைப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடளாவிய ரீதியில் பேக்கரி ஊழியர்களில் 75 வீதமானவர்கள் சுமார் ஐந்து நாட்கள் வரை விடுமுறையில் சென்றுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கூறுகின்றார்.

வருடந்தோறும் பண்டிகைக் காலப்பகுதியில் இந்த நிலைமை ஏற்படுவதுடன், அதன்மூலம் மக்கள் தற்காலிகமாக அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# கண்ணீர் அஞ்சலி



## கந்தையா சந்திரபோஸ்

கிளி/ஆனைவிழுந்தான்குளம் அ.த.க பாடசாலையின் முன்னாள் அதிபரும் தற்போது கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் இணைப்பு அதிபருமான திருமதி நவீனமலர் சந்திரபோஸ் அவர்களது அன்புக் கணவர் அமரர் கந்தையா சந்திரபோஸ் அவர்கள் 13.04.2014 அன்று இறைபதமடைந்து விட்டார். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்டம் (சி-7027) அதிபர்கள் சங்கம்

# விளையாட்டு விழா

(மானிப்பாய்)

யூத் கழகம் நடத்தும் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

விளையாட்டு நிகழ்வுகளாக 100, 200 மீற்றர் ஓட்டம், அஞ்சல் ஓட்டம், கயிறு இழுத்தல், கால்பந்தாட்ட இறுதிப் போட்டி என்பன நடைபெறவுள்ளன. (செ-23)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
## செல்லமுத்து கணகி

மற்றவர் மனத்தை என்றும்
மகிழ வைப்பதுவே மூச்சாய்
இத்தனை நாளும் எம்மோடிருந்து
இன்று எமைவிட்டுப் போனதேனோ...!

பிறப்பு :- 1929.02.11
இறப்பு :- 2014.03.16

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- நன்றி -

கலாசாலை வீதி, திருநெல்வேலி, பாரதிபுரம்.

தகவல் :- துரைசிங்கம் (மகன்)

(சி-7026)

# கண்ணீர் அஞ்சலி



## மயில்வாகனம் மகேந்திரன்

*"ஊரெழுவில் பிறந்தாய் கொழும்பிலே வாழ்ந்தாய்*
*ஆனாலும் எம் மண்ணை மறவாமல் இருந்தாய்*
*ஊருக்கு வந்த போதெல்லாம் எமதாலயம் வந்தாய்*
*இத்திருவிழாவிற்கும் வருவதாய் உறுதி கூறினாய்*
*ஆனால் காலனோ உன்னை அங்கு அழைத்ததேன்"*

பிறப்பு 02.04.1941
இறப்பு 11.04.2014

எமது ஆலயத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஊரெழு கிழக்கு. (சி-7028) நாவலம்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய நிர்வாகத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளால் ஏற்பட்டிருந்த அச்சுறுத்தல் முள்ளிவாய்க்காலுடன் முடிபுக்கு வரவில்லை

## சண்டேலீடர் ஆசிரியர் தலையங்கம் சுட்டிக்காட்டு

**2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 இல் நந்திக் கடல் ஓரம் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஏற்பட்ட மரணத்துடன் இலங்கையின் ஸ்திரத்தன்மை ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமை போன்றவற்றுக்கு ஏற்பட்டிருந்த அச்சுறுத்தல் முடிபுக்கு வந்து விடவில்லை என சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அவர்களுக்கான தடை தொடர்கிறது என்ற தலைப்பில் வெளியான மேற்படி ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எல்.ரி.ரி அமைப்பு தொடர்ந்தும் ஓர் இராணுவ அச்சுறுத்தலாக இல்லாத போதிலும் பிரபாகரன் காலத்திலும் பார்க்க கூடுதல் பழி தீர்க்கும் மனோபாவத்துடன் மேற்கத்தேய கைத்தொழில் நாடுகளிலிருந்து இலங்கை அரசினை தொடர்ந்தும் எதிர்த்து வரும் புலம்பெயர் தமிழர் என அழைக்கப்படும் ஒரு அமைப்பானது இலங்கையிலிருக்கும் எல்.ரி.ரி சக்திகளை மீள் எழுச்சி கொள்ள வைத்து புத்துயிர் ஊட்டும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது.

இந்த நாடுகளில் ஏற்கனவே தடை செய்யப்பட்டு சட்டவிரோதமானவையாக அறிவிக்கப்பட்டுமிருந்த இந்த தமிழ் பயங்கரவாத அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ள நிலைமையிலும் கூட தமக்கான ஆதரவினை மேற்குலகின் மத்தியில் தொடர்ந்தும் பேணிக் கொள்ளக்கூடியவர்களாகவே உள்ளனர்.

குறிப்பாக மேற்கத்தேய அரசியல் தலைவர்கள் மத்தியில் மத ரீதியான தமது நெருக்குவாரங்கள் மற்றும் பணம்மூலமானசெல்வாக்குவளங்களினூடாக தமக்கான அனுதாப ஆதரவுகளை வெற்றிகரமாக சாதித்தே வருகின்றனர்.

முப்பதாண்டு காலப் போரின் பெரும் பகுதியில் நாட்டின் படைத்தரப்புக்களுக்கெதிராக தரையிலும் கடலிலும் இறுதிக்கட்டங்களின் போது வானிலுங்கூட விரிவாக்கப்பட்டிருந்த யுத்தத்திற்கான நிதியுதவியினை இந்த அமைப்புக்களால் தொடர்ந்து திரட்டக் கூடியதாகவும் இருந்திருக்கிறது.

இது ஒன்றே அவர்களுக்கு இருந்த பலத்தை வெளிக்காட்டப் போதுமானதாகும்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி நிலைமைகள் தொடர்ந்தும் ஊதிப் பருத்தவையாகவே இருந்து கொண்டிருக்கின்றன.

இலங்கை படைகளுக்கெதிரான பயன்பாட்டிற்கு அப்போது கொள்வனவு செய்யப்பட்ட படைக் கலங்கள், கப்பல்களுடன் விமானங்களுக்குமான பணத்தேடல்கள் போன்றே போர் இல்லாத இப்போதும் அவை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

தற்போதும் மேற்கத்தேய அரசியல் வாதிகள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் போன்றோரை தமது நோக்கங்களுக்குக்காக கவர்ந்து இருப்பதற்குரிய நிதியினை மேற்குலகில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடமிருந்து வலுக் கட்டாயமாக திரட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருப்பதற்கான ஏராளம் தகவல்களும் உண்டு.

2001ஆம் ஆண்டில் நியூயோர்க்கிலும் வோஷிங்டனிலும் அல்கொய்தா அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து ஐ.நா. பாதுகாப்புச் சபையினால் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் கீழ் புலம் பெயர் அமைப்புக்களுக்கான தடை விதிக்கப்பட்டதாயிருக்கிறது. இத்தீர்மானத்தின் படி பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளில் ஒருவருக் கொருவர் உதவி - ஒத்துழைக்கவேண்டுமென ஐ.நா. உறுப்பு நாடுகள் எதிர் பார்க்கப்படுகின்றன. தற்போதைய தமது சட்ட நிலைமைகளில் எல்.ரி.ரி அமைப்பானது தடை செய்யப்பட்ட ஓர் வெளி நாட்டு பயங்கரவாத இயக்க மாக இருந்த போதிலும் அதற்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள கூச்சப்படும் அநேகமான ஐரோப்பிய நாடுகள் அதன் தலைவர்களை சுதந்திரமான முறையில் உபசரித்தும் வருகின்றன.

பாராட்டுக்குரிய ஜனநாயக உறைவிடமாக பெரிதும் கருதப்படுவதாக கூறப்படும் பிரித்தானிய பாராளுமன்றத்தில் கூட பிரித்தானியாவில் உள்ள இவ்வமைப்புகளில் சில உபசரிக்கப்பட்டு வருகின்றன.

விதிக்கப்பட்ட இத்தடையுடன் எல்.ரி.ரி.யின் இம்முன்னணி அமைப்புக்கள் மேற்குலகிடமிருந்து தமக்கான பெரும் அனுதாப ஆதரவி னைப் பெற்று விடும் நோக்கில் தம க்கு அரசு பெரும் அநியாயம் செய்வதாக குற்றம் சாட்டுவர் என்பது பெரிதும் சாத்தியமானதேயாகும்.

மேற்கத்தேய நாடுகள், தமது தேசிய நலன்கள், அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் போது மட்டுமே செயற்படுவார்கள் என்பதே அநேகமாக சாத்தியமான ஒன்றாக இருக்கும்.

ஆனாலும், ஐ.நாவின் பாதுகாப்புச் சபை தீர்மானமானது பயங்கரவாதத்திற்கெதிரான ஒத்துழைப்பு மட்டில் அதன் உறுப்பு நாடுகளில் 9/11 விகிதத்தினர் கோரியதன் பின்னரே நிறைவேற்றப்பட்டது. உலகினை வீராப்புடன் வலம் வரும் இச் சக்திமிக்க நாடுகளின் பரஸ்பர ஆதரவு இல்லையெனில் வலுவற்ற நாடுகளிடமிருந்து இவர்கள் எதிர்ப்பார்ப்பதற்கு என்ன உண்டு?

பயங்கரவாதிகள் மட்டில் வலுவற்ற நாடுகளும் அதற்கேற்பவே தமது ஆதரவினையும் வழங்கக் கூடியதாயிருக்கும்.

பாதுகாப்புப் படையினராலும் எல்.ரி.ரி யினராலும் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களுக்கு எதிராக நியாயம் வழங்கப்பட வேண்டுமென்பதே மேற்கு நாடுகளின் கோரிக்கையாக இருக்கிறது.

ஆயினும், இலங்கைப்படைகளை நீதியின் முன் கொண்டு வருவதற்கு பகீரத முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அவர்களுக்கு எல்.ரி.ரி. குற்றவாளிகள் பெற்றிருந்தநியாயத்தீர்ப்பானது பெரிதும் ரசிக்கத்தக்கதாகவே இருந்திருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட அத் தடைகளை திட்டமிட்டு உருவாக்குவதற்கும் அவற்றை நடை முறைப்படுத்துவதற்கும் எவ்வளவோ ஆழமாக சிந்தித்துச் செயற்பட வேண்டியிருக்கும் என்பதுடன் தொழில் நுட்பத்துடன் கூடிய இராஜதந்திர செயற்பாடுகளும் மிகுந்த மதிநுட்பத்துடன் கூடிய அளவிற்கு அனுபவமிக்க வழக்கறிஞர் களை ஈடுபடுத்த வேண்டிய தேவையுமுள்ளது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 80 |
| தக்காளி | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 |
| கோவா | 20 | 40 |
| கரட் | 80 | 120 |
| பூசணி | 40 | 40 |
| புடோல் | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 |
| பயற்றங்காய் | 150 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 200 |
| போஞ்சி | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | — |
| கீரை - 1 பிடி | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 80 |





யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் முனைவர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவிக்கு பரிசில் வழங்குவதை படங்களில் காணலாம்.

## ஸ்ரீ வாகீஸ்வரியில் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில்வடக்குஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையம், விளையாட்டுக்கழகம், கல்வி வளர்ச்சிக் கழகம் என்பன இணை ந்து நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி க்கு நிலைய முன்றிலில் நிலையத் தலைவர் செ.சுதர்சன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேசசபை தவிசாளர் ப.வசந்தகுமார், கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு அபிவிருத்தி அலுவலர் சுந்தரமூர்த்தி பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

## இன்றைய இராசி பலன்

15.04.2014
(சித்திரை 02, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
பூரணை பிற்பகல் 1.49 மணிவரை
சித்திரை முன்னிரவு 11.40 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
சித்திரைச் சித்திரை

வளவன்

**மேடம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ் வீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறும், நண் பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், எடுத்த காரியங்கள் எளி தில் கைகூடும்.

**இடபம்:** தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெருமைகள் வந்து சேர சந்தனை வழிபட வேண்டிய நாள், அரசு வழியில் ஆதாயமுண்டு.

**கடகம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், தொலை தூரச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** உறவு-பகை பாராமல் உதவும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், கௌரவம், அந்தஸ்து உயரும், வெற்றிகள் குவிய விநாயகப் பெருமானை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பெரியவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** பயணங்களால் பலனுண்டு, திட்டமிட்ட காரியமொன்றில் சில திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர் நலன் கருதி சில செலவுகள் ஏற்படலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டு வீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த் தியாகும் வாய்ப்புண்டு, சுப நிகழ் வுகளில் கலந்து கொள்ளும் வாய் ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** பொதுவாழ்வில் புகழ்கூடும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், செய்தொழிலில் எதிர் பார்த்த சலுகைகள் கிடை க்கப் பெறுவீர்கள், நினைத்தது நிறை வேறி நிம்மதி காணும் நாள்.

**மகரம்:** கனவுகள் நனவாக கற்பக மூர்த் தியை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செயற்பாடுகளில் தீவி ரம் காட்டுவீர்கள், வருமானம் திருப் திகரமானதாக இருக்கும்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பெரியோரின் ஆதரவு கிடை க்கும் வாய்ப்புண்டு, அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுப்பீர்கள்.

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழி பட வேண்டிய நாள், திடீர் செல வுகளால் சேமிப்பில் சிறிது கரை யலாம், தொழில் ரீதியான பயணங் களால் கூடுதல் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்தர் சபையின் நேர்முகப்பரீட்சை

பருத்தித்துறை, கோப்பாய், சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களின் மத்தியஸ்தர் சபையின் பதவிக் காலம் முடிவுற்றுள்ள தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு பதிலாக மீண்டும் புதிய உறுப்பினர்களை நியமனம்





செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலும், பிற்பகல் ஒரு மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலும் நடைபெறவுள்ளது என கொழும்பு மத்தியஸ்தர் சபை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந் நேர்முகப் பரீட்சைக்கு கடிதங்கள் கிடைக்கப் பெற்றவர்கள் தங்களது கடமைகளை உறுதிப்படுத்துவதற்கான கல்விச் சான்றிதழ்கள், நல்லொழுக்கச் சான்றிதழ்கள், சமூக சேவைகள் பற்றிய சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்க வேண்டும் என மத்தியஸ்தர் சபை ஆணைக்குழு கேட்டுள்ளது. (2-134)




# பாரம்பரிய உள்ளூர் கைப்பணி பொருட்களுக்கான ஏற்றுமதி சந்தைவாய்ப்பு







இலங்கையில் பனைசார் கைப்பணிப் பொருட்களுக்கான வெளிநாட்டு சந்தைப்படுத்தலை மேற்கொள்ளும் தனியார் வரையறுக்கப்பட்ட Northern Palmyrah Trading (pvt) Ltd நிறுவனமானது இலங்கையில் கிராமிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப்பொருட்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளும் வகையில் காட்சியறை ஒன்றை கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி பிளாஸாவில் ஆரம்பித்துள்ளது. குறிப்பாக வெளிநாட்டு மக்களைக்கவரும் வகையில் தரமான விதம் விதமான கைப்பணிப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

இங்கு பனை, தென்னை, கமுகு, வாழை நாரினால் செய்யப்படும் கைவினைப் பொருட்கள் தென்னஞ்சிரட்டை மற்றும் கடற் பாறைகளை செதுக்கி உருவாக்கப்படும் நாகரீக அணிகலன்கள் மற்றும் உள்ளூர் கைத்தறியிலான ஆடைகள் கைப்பைகள் முக்கிய இடம்பெறுகின்றன.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் பனைசார் கைவினைப்பொருட்கள் இதில் முதன்மை வகிக்கின்றன. கொழும்பு நகரில் சுற்றுலாப்பயணிகள் சுலபமாக அணுகக்கூடிய இடத்தில் அமையப்பெற்றுள்ள இக்காட்சியறையானதுஎதிர்கால ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்கான அஸ்திவாரமாகும்.

இது தவிர இந்நிறுவனமானது **Good market** மூலமாக தரமான பனைசார் உணவுப் பொருட்களை நவீன முறையில் பொதி செய்து சந்தைப்படுத்தி வருகின்றது.

இந்நிறுவனம்வறியமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவக்கூடிய வகையில் சந்தை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையே தனது முதன் நோக்காக கொண்டுள்ளது.

குறிப்பாக வடக்கு கிழக்கில் பனைப் பொருளாதாரத்தை நம்பி வாழும் மக்களுக்கு தொடர்ச்சியான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

உற்பத்தியாளர்கள் தமது தரமான கைவினை பனை சார் உணவுப்பொருட்களை சந்தைப்படுத்தும் வாய்ப்பினை இந்நிறுவனத்தின் Northern palmyrah trading (Pvt) Ltd. 250/01/09, 1st Floor, Liberty Plaza, R.A.De, Mel Mawatha, Colombo-03, T.P:01123 01024, E-mail:info@northe rnpalmyarah.com www.crafts.lk என்ற முகவரிகளூடாக தொடர்புகொண்டுபெற்றுக்கொள்ளலாம். (அ)

## சாதனையாளர் சிறப்புரை நிகழ்வில் தமிழ் விஞ்ஞானி சிவானந்தன்

யாழ்.றோட்டறிக் கழகத்தின் 73 ஆவது அகவை நிறைவு நாளை கொண்டாடும் சாதனையாளர் சிறப்புரை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு அமெரிக்காவின் வெள்ளை மாளிகை உயர்விருது பெற்ற தமிழ் விஞ்ஞானியும் பௌதீகவியல் பேராசிரியருமான சிவலிங்கன் சிவானந்தன் கலந்து கொள்ளவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-23)

## ஞானவீர ச.ச.நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு விழா

(மானிப்பாய்)

கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நூல் வெளியீடும் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் ம.இராஜேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, விசேட விருந்தினராக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார், யாழ்.உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன், கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் க.தவகீஸ்வரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது முருகானந்தம் இசை குழுவினரின் மங்கல இசை, கோண்டாவில் ஞானவீர முன்பள்ளி சிறுவர் பூங்கா திறப்பு விழா, பரிசில் வழங்கல், "ஞானவீரம்" எனும் நூல் வெளியீடு, கௌரவிப்பு உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (2-23)

## அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

தச்சன்தோப்பு கோவிலாக்கண்டி கன்னியம் பிட்டி அண்ணமார் மகேஷ்வரர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழாவின் இறுதி நாள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 108 சங்குகள் அபிஷேகத்திற்காக வைக்கப்பட்டு சங்காபிஷேகம் இடம்பெறும்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் காலை 10 மணி தொடக்கம் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன யாழ் சேவையில் நேரடி ஒலிபரப்பு செய்யப்படும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (2-29)

## வேலையற்ற கலைப்பட்டதாரிகள் பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வேலையற்றிருக்கும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பட்டதாரிகள் தமது பெயர் விபரங்களை உடனடியாக பதிவு செய்ய வேண்டுமென யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப் பெயர் விபரங்களை பிரதான வளாகத்தில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் காரியாலயத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வரை காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 3.30 மணி வரையும் பதிவு செய்து கொள்ளலாம்.

கடந்த 9 ஆம் திகதி உயர்கல்வி அமைச்சின் செயலாளருடன் நடந்த சந்திப்பின்போது பல தனியார், அரச வெற்றிடங்கள் இருப்பதாகவும் ஆனால் தகுதி வாய்ந்த் கலைப்பட்டதாரிகள் இல்லாமையினால் அவை நிரப்பப்படாமல் இருப்பதாகவும் தகுதி வாய்ந்த கலைப் பட்டதாரிகள் இருப்பின் வேலை வாய்ப்பிற்கான நேர்முகப் பரீட்சையை வேலை தருணர்களினால் நடத்துவித்து வேலைவழங்க ஆவன செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

ஆதலால் வேலையற்றிருக்கும் யாழ். பல்கலைக்கழக கலைப்பட்டதாரிகள் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## தொழில் முயற்சியாளருக்கு திறன்விருத்தி பயிற்சி நெறி

பெண் தொழில் முயற்சியாளருக்கான தொழில் முயற்சியாண்மை திறன் விருத்தி பயிற்சி நெறியானது யாழ். மாவட்ட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.கைத் தொழில் அபிவிருத்தி சபை பிரதிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பெண் தலைமைத்துவமுடையோர், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர் மற் றும் இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட, தொழில் முயற்சியை ஆரம்பிக்க விருப்பமுள்ள பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் இப்பயிற்சிநெறியின்பின்னர் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற் கானமேலதிகஉதவிகளும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயிற்சிநெறியில் கலந்து கொள்ள விரும்பும் பெண் தொழில் முயற்சியாளர்கள் **இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கட் டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்** எனும் முகவரியுடன் எதிர்வரும் 25 ஆம்திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறும், மேலதிக விபரங்களை 021-222-2421 என்ற தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வெளியுறவுக் கொள்கை மாற்றி அமைக்கப்படவேண்டும்

## செந்தமிழன் சீமான் தெரிவிப்பு

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். தஞ்சை திலகர் திடலில் இடம் பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஈழத் தமிழர்களின் படுகொலையை முன்நின்று நடத்தியது காங்கிரஸ் கட்சி. இதற்கு துணையாக இருந்தது தி.மு.க. இந்தியாவின் வெளியுறவு கொள்கையை மத்திய அரசு ஆதரிக்கிறது. ஆனால் ஈழத்தில் தனி தமிழ் ஈழம் அமைய வேண்டும் என்றால் மத்திய அரசு எதிர்க்கிறது.

இந்தியாவின் வெளியுறவு கொள்கை மாற்றத்தால்தான் நம் தேசத்தின் முழு விடுதலையை நாம் பெற முடியும். அப்போது தான நம் நாட்டிற்கென்று நாம் எதையும் செய்து கொள்ளமுடியும். இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியவர் தமிழக முதல்வர் ஜெயலலிதா. மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டத்தை காங்கிரஸ் கட்சி கொண்டு வந்தது. இதற்கு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது மு.க.ஸ்டாலின்.

இந்த திட்டம் நிறைவேறினால் டெல்டா மாவட்டம் பாலைவனமாகி விடும் என்று கருதி. உச்சநீதிமன்றம் வரை சென்று தடுத்து நிறுத்தியவர் முதல்வர் ஜெயலலிதா., பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையில், காவிரி, முல்லை பெரியாறு, கச்சதீவு, மீனவர்கள், மீத்தேன் எரிவாய்பு, ஈழ தமிழர் படுகொலை உள்ளிட்ட எந்த பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வு காணப்படும் என்று குறிப்பிடப்படவில்லை என்றார். (2)

# சீனப் பிரஜைகள் ஐவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கடல்வாழ் உயிரிழங்களை எடுத்துச் சென்ற ஐந்து சீன பிரஜைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வான் மூலம் இவற்றை எடுத்துச் சென்ற வேளையில் கொள்ளுப்பிட்டி வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்தவர்களால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சீன பிரஜைகளிடம் இருந்து உலர்த்தப்பட்ட 92 கடல் குதிரைகள், 90 கடல் அட்டைகள், 24 கடல் நத்தைகள், 70 சிப்பிகள் மற்றும் முருங்கைக்கல் பாறைகளின் பகுதிகள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.சந்தேக நபர்கள் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். (2)


# போர்க்குற்ற விசாரணைகள் ஜூன் மாதம் ஆரம்பம்

## ஆங்கில வார இதழ் தகவல்

இலங்கையில் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றச்சாட்டுகள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐ.நாவில் முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச விசாரணைகள் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக ஐ.நா. உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த விசாரணையை மேற்கொள்வதற்குத் தேவையான பொறிமுறை பற்றிய தெளிவற்ற நிலை காணப்படுகிறது. இந் நிலை மே மாத இறுதியிலேயே முடிவுக்கு வரும். அதன்பின்னரே முழு அளவிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. ஐ.நாவின் இந்த விசாரணை முயற்சிகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருப்பதுடன், அதற்கு அயல்நாடுகளான இந்தியாவும் பாகிஸ்தானும், இலங்கைக்கு பலத்த ஆதரவை வழங்கி வருகின்றன.அதேவேளை, ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவகுமார் சுஜித்குமார்

(6123)

கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற (க.பொ.த.) சாதாரண தர பரீட்சையில் 9 A சித்தியை பெற்ற யா/கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற சுஜித்குமாரை மனதார பாராட்டி வாழ்த்துவதோடு உயர் தரத்திலும் சிறந்த பெறுபேற்றை பெற்று பல கலைகளையும் பயின்று பல்கலைக்கழகம் சென்று பற்பல பட்டங்களைப் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: சித்தப்பா, சித்தி, தம்பி,தங்கை


# 19 வாகன விபத்துக்களில் 23 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

## பொலிஸ் தலைமையகம்

நாட்டில் கடந்த மூன்று நாட்களில் இடம் பெற்ற வாகன விபத்துக்களில் 23 பேர் பலியாகியுள்ளனர். கடந்த 10ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையில் இவ்வாறு மரணங்கள் பதிவாகியுள்ளன.

19 வாகன விபத்துச் சம்பவங்களில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.10 ஆம் திகதி காலை ஆறு மணி முதல் 13 ஆம் திகதி காலை ஆறு மணி வரையில் மொத்தமாக 270 வாகன விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த விடயத்தை கருத்திற் கொண்டு மக்கள் வாகனங்களை செலுத்த வேண்டுமென பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை பண்டிகைக் கால பாதுகாப்பு கடமைகளுக்காக 8 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிவில் உடையில் 8 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இவ்வாறு பொலிஸார் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அதிகளவில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் நகரங்களுக்குள் பிரவேசிக்கும் பொதுமக்களை இலக்கு வைத்து சில கும்பல்கள் நாச வேலைகளில் ஈடுபட முயற்சித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகளை கண்டு பிடித்து கைது செய்ய பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2)

# தமிழ் மக்களின் நலன்களை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

## வேட்பாளர் நரேந்திர மோடி உறுதி

உலகமெங்கிலும் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் நலன்களை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

இலங்கை, மலேசியா, பிஜீ தீவுகள் உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின நலன்கள் உறுதி செய்யப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாரதீய ஜனதா கட்சி ஆட்சி பொறுப்பை ஏற்றுக்கொண்டால் தமிழ் மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகள் இந்திய விவகாரங்களில் தலையீடு செய்வதாகக் குறிப்பிட்டுள்ளார். குறித்த நாடுகளின் தலையீடுகள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக மீனவர்களை பாதுகாப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கத்திற்கு தைரியம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். இலங்கை மற்றும் பாகிஸ்தான் கடற்படையினர், தமிழக, குஜராத் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். (2)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1964 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 32.5 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / கடை<br>தொ.இ: B/1290 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 55.5 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/1849 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 55 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L / மெக்கானிக்<br>தொ.இ: B/1294 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 74.25 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, GAQ<br>தொ.இ: G/1856 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 23.5<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L / ஹோட்டல் வேலை (ஜேர்மன் PR)<br>தொ.இ: B/1295 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS / Dr.<br>தொ.இ: G/1860 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 36 சூரி செவ் 6 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / Computer Operator<br>தொ.இ: B/1296 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 16.5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/1861 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்தி விஜயகாந்தை ஒழிப்போம்!-சீமான் தந்திரம்



பரபரப்பாக இருக்கும் சீமானின் அறையில் மாட்டப்பட்டு இருக்கும் அவரது ஆள் உயர படத்துக்குக் கீழே "இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை!' என்ற வாசகம் மிளிர்கிறது. அ.தி.மு.க-வுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யத் தயாராகிக்கொண்டு இருந்த சீமானுடன் நடந்த சந்திப்பு இது!

**"இந்தத் தேர்தலில் உங்களது நிலைப்பாடு பற்றிச் சொல்லுங்கள்!"**

"எனது ஆதரவு யாருக்கு என்று நீங்கள் கேட்டால் எனது கொள்கைக்கே நான் ஆதரவளிக்கப் போகிறேன் என்பதே எனது பதிலாகும். எனக்கு என்று ஒரு தத்துவம், கோட்பாடுகள் இருக்கின்றன. அந்தக் கோட்பாட்டுக்கு எது சரியானதோ அந்த முடிவை எடுப்பேன். மத்திய காங்கிரஸின் துணைகொண்டுதான் ஈழத்தில் என் இனத்தை அழித்து இருக்கிறார்கள். பி.ஜே.பி-யும் இதனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தது. இந்த நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக இருப்பது இந்த தேசியக் கட்சிகள்தான். ராஜபக்ஷவுக்கும் மோடிக்கும் பெரிய வேறுபாடு கிடையாது. அந்த நாட்டில் தமிழ் மக்களைக் கொன்றவர் அந்த ஜனாதிபதி. இந்த நாட்டின் சிறுபான்மை மக்களைக் கொன்ற ஒருவர் பிரதமராக முடியும் என்றால், இங்கே தர்மம் என்பதே கிடையாதா? கர்நாடாவில் காங்கிரஸ் ஆண்டாலும், பி.ஜே.பி ஆண்டாலும் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் வராது. இந்த இரண்டு தேசிய கட்சிகளால் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை. அதனால்தான் நான் யாருக்கும் ஆதரவளிக்கவில்லை."

**"தமிழகத்தில் ஏன் அ.தி.மு.க-வுக்கு ஆதரவு என முடிவெடுத்தீர்கள்?"**

"தி.மு.க-வை ஆதரிக்க முடியாது. என் இனம் அழிந்தபோது அதை வேடிக்கை பார்த்தவர் கருணாநிதி. ஈழம் தனிநாடாக மலர வேண்டும் என்பதற்காகப் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ஜெயலலிதா சொன்னார். அந்த மக்களுக்காகக் குரல் கொடுக்கிறார். அதனால், அவர்களை ஆதரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், ஜெயலலிதா பிரதமராக வர வேண்டும் என்று நாங்கள் பிரசாரம் செய்யப்போவது இல்லை. காங்கிரஸ், பி.ஜே.பி போட்டியிடும் தொகுதிகளில் மட்டும் அவர்களை வீழ்த்துவதுதான் எங்கள் திட்டம். அதேபோல தே.மு.தி.க. போட்டியிடும் 14 தொகுதிகளிலும் அந்தக் கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்யப்போகிறோம்.


விஜயகாந்த் தனது பிரசாரத்தில், "ஈழத் தமிழர்களை வைத்து பிழைப்பு நடத்துகிறார்கள்' என்று சொல்கிறார். இவர் யாரைச் சொல் கிறார்? தெரியவில்லை. வைகோ அண்ணனைச் சொல்கிறாரா? இல்லை, நெடுமாறன் ஐயாவைச் சொல்கிறாரா? என்னைச் சொல்கிறாரா? தெரியவில்லை. ஈழத்தமிழர் கண்ணீரை வைத்து அரசியல் செய்கிறோமா அல்லது கண்ணீரைத் துடைக்க அரசியல் செய்கிறோமா? என்பதை விஜயகாந்துக்குப் புரியவைக்க வேண்டும். தமிழர்களின் வாக்கு விஜயகாந்துக்கு முக்கியம். ஆனால், தமிழர்களின் உயிர் முக்கியம் இல்லையா? இந்த ஒருமுறை மட்டும் தேர்தலில் இரட்டை இலை சின்னத்தைப் பயன்படுத்தி இவர்களை கூண்டோடு ஒழிக்க வேண்டும். 2016இல் நாங்களே நேரடியாகப் போட்டியிடுவோம்."

**"ஜெயலலிதாவே ஈழப் பிரச்சி னையில் வேறுவேறு மாதிரி தனது நிலைப்பாடுகளை மாற்றிக்கொண்டவர்தானே?"**

"ஒருவேளை ஜெயலலிதா இப்போது சொன்னதை எல்லாம் செய்யவில்லை என்றால், எங்கள் கொள்கைக்கு ஒத்துவரவில்லை என்றால் 2016 தேர்தலில் ஜெயலலிதாவையும் சேர்த்தே ஒழிப்போம். நாங்கள் யாருக்கும் வேண்டியவர்கள் இல்லை. மக்கள் மட்டுமே எங்களுக்கு வேண்டியவர்கள். என் இனத்துக்கு எதிராக எவன் சிந்திக்கிறானோ....எவன் வேலை செய்கிறானோ... அவனுக்கு இங்கே வேலை இல்லை. அவனை உதைப்போம்."

**"ராகுலும் வேண்டாம்... மோடியும் வேண்டாம்... ஜெயலலிதாவும் வேண்டாம் என்றால் யார்தான் பிரதமராக வர வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?"**

"பிரதமர் என்ன பிரதமர்? ஏன் மோடி, ராகுலைவிட்டால் வேறு ஆட்கள் இல்லையா? இந்த நாட்டை ஆண்டதிலேயே சரியான பிரதமர் என்றால் வி.பி.சிங்தான். இவர் என்ன பி.ஜே.பி-யிலும் காங்கிரஸிலுமா இருந்தார்? எந்தக் கொம்பனையாவது வி.பி.சிங்கைக் குறை சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம்!."



**"வைகோவும் அந்தக் கூட்ட ணியில்தானே இருக்கிறார். அவருக்கு எதிராகவும் பிரசாரம் செய்வீர்களா?"**

"அதைச் செய்ய முடியாது! அண்ணன் வைகோ பி.ஜே.பி-யுடன் போனதை ஓர் வரலாற்றுப் பிழையாகப் பார்க்கிறோம். அவரை ஆதரித்துப் பிரசாரம் செய்யப்போவதும் இல்லை. எதிர்க்கப்போவதும் இல்லை. பி.ஜே.பி-யுடன் நிற்கும் அரசியல் தோற்கும். அன்றே அவர் வெளியேறி வருவார். அண்ணன் ராமதாஸ், மனிதநேய மக்கள் கட்சி, இந்திய ஜனநாயகக் கட்சி எல்லோரையுமே எங்கள் நேசக் கட்சிகளாகத்தான் பார்க்கிறோம். வலிமையான கூட்டணிகள் இல்லாததால் வேறுவேறு அணிக்கு அவர்கள் போய்விட்டார்கள். எதிர்காலத்தில் என் தலைமையில்கூட கூட்டணிகள் உருவாகலாம்!

அதேபோல், எந்தக் கட்சியில் பெண் வேட்பாளர்கள் இருந்தாலும் அவர்களை எதிர்த்து வேலை செய்ய வேண்டாம் என்றும் முடிவெடுத்து இருக்கிறோம். நாங்கள் பெண்ணிய உரிமைக்காகக் குரல் கொடுக்கிறோம். அதனால், பெண்களுக்கு எதிராக எப்போதும் வேலை செய்ய மாட்டோம். பி.ஜே.பி-யில் பெண் வேட்பாளர் கிடையாது. விஜயகாந்த் கட்சியிலும் கிடையாது. ராமதாஸ் பெண்களுக்கு பயிலரங்கம் மட்டும் நடத்துகிறார். ஆனால், சீட் கொடுப்பது இல்லை. பெரியாரோட சீடர் என்று சொல்கிற வைகோவும் ஒரு சீட்டும் கொடுக்கலை. இதுதான் இவங்க லட்சணம்!"

**"அப்படிப்பார்த்தால் திருச் சியில் காங்கிரஸ் வேட்பாளர் சாருபாலா தொண்டைமான், கரூரில் ஜோதிமணி... அவர் களை எதிர்க்கப்போவது இல் லையா?"**

"ஆமாம்... திருச்சியில் நாங்கள் சாருபாலா தொண்டைமானை தோற்கடிக்கப் போவதில்லை. ஆனால், விஜயகாந்த் கட்சியைத்தான் தோற்கடிக்கப் போகிறோம். கரூரில் காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணியை எதிர்க்க மாட்டோம். திருவள்ளூரில் அண்ணன் ரவிக்குமார் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் நிற்கிறார். அவரை எதிர்க்க மாட்டோம். அவர்களுக்கு வாக்கு கேட்காமல் நான் அ.தி.மு.க-வுக்கு வாக்கு கேட்க முடியாது! என்னுடைய இலக்கு தேசியக் கட்சிகளை ஒழிப்பது. எந்த தேசியக் கட்சிகளாலும் தமிழ்நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதை மக்கள் மன்றத்தில் சொல்வோம்!"

சீற்றத்துடன் தனது பேச்சை முடிக்கிறார் சீமான்!

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திருமதி ஸ்ரீநகுலமீரா சிதம்பரநாதன்



தோற்றம்
16.05.1947

மறைவு
21.04.2008

திதி:- அபரபக்க பிரதமை

அம்மா! அன்பின் மறுபெயரன்றோ!
இங்கு நீங்கள் இல்லை
அனுபவிக்கிறோம் அதன் வலியை
வலி தந்த கண்ணீரில் விளைந்த
இதயப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்
தங்களுக்கே அது சமர்ப்பணம்

கனத்த இதயத்துடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் தெற்கு
உரும்பிராய்.

(6110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விபத்தில் யுவதி மரணம்; நால்வர் காயம்!

மாதம்பை - இரட்டகுளம் பிரதேசத்தில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதியதில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, நால்வர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

குறித்த விபத்தில், தெஹிவளையைச் சேர்ந்த வயது 25 என்ற பெண்ணே பலியாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த கார் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துள்ளது.

சம்பவத்தில்படுகாயமடைந்த நால்வரும் சிலாபம் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டு, பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளையே குறித்த யுவதி மரணமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2)

# பாதுகாப்பு ஏற்பாடுகளை தளர்த்தினால் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படும்

## பேராசிரியர் ரொஹான் எச்சரிக்கை



**(கொழும்பு) தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக யுத்தத்தில் இலங்கை அரசாங்கம் தோல்வியைத் தழுவியுள்ளதாக பயங்கரவாதத் தடுப்பு தொடர்பான நிபுணத்துவ பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்த களத்தில் அரசாங்கம் தோற்கடித்த போதிலும் ஊடக களமுனையில் தோல்வியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பு என்பதிலிருந்து பாரியளவிலான பிரசாரப் போராட்ட இயக்கமாக பரிணமித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போலியான தகவல்களின் அடிப்படையில் புலிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசார போராட்டத்தை புரிந்து கொண்டு அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க இலங்கை இராஜதந்திரிகள் கூடுதல் முனைப்பு காட்டுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுடன் அரசாங்கம் காத்திரமான தொடர்புகளைப்பேண வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் ஊடகங்களுடன் அரசாங்கம் இணைந்து செயற்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனவாதிகள் அல்லாத இளம் அரசியல் தலைவர்களை இலங்கை உருவாக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

அதிகளவான தமிழ், முஸ்லிம்களை பாதுகாப்புப் படையில் அரசாங்கம் இணைத்துக்கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். போலியான செய்திகளை முறியடித்து உண்மையான தகவல்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அதற்கு அரச நிறுவனங்களை பயன்படுத்திக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள சர்வதேச தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் நந்தகோபன் என்ற புலித் தலைவரை கைது செய்தமை புலிகளுக்கு எதிரான முக்கிய திருப்புமுனையாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளில் அரசாங்கம் மாற்றம் செய்யக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார். தொடர்ந்தும் பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுவாக காணப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை தளர்த்தினால் ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளைப் போன்று இலங்கையிலும் மீள யுத்தம் ஏற்படக் கூடிய அபாயம் நிலவிவருவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.(2)



மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வும் கட்டுடை சைவ வித்தியாசாலை மண்டபத்தில் இடம்பெற்ற போது... (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

## விபத்து ஏற்படாத வகையில் செயற்படுங்கள் பொலிஸார்

விபத்துக்களை ஏற்படுத்தும் வகையில் பட்டாசு, வானவேடிக்கை பொருட்களை பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

சிலர் பிறருக்கு விபத்து ஏற்படுத்தும் வகையில் பட்டாசு பயன்படுத்துவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்யாது அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் வகையில் புது வருடத்தை கொண்டாடுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (2)

# வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு உதவிகள்

யாழ்.பிரதேச செயலகத்தினுள் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கும் வாழ்வின் எழுச்சி திட்டப் பயனாளிகளுக்கும் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா உதவித் திட்டங்களை வழங்கினார்.

யாழ்ப்பாணம்வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் மேற்படி நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

யர்ழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தால் இவ்வாண்டுக்கான சித்திரை புத்தாண்ட சந்தையின் இரண்டாவது நாள் நிகழ்வில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமுர்த்தி உதவித் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கான நிதியுதவியும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அதேவேளை வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஊடாக வறிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக 12 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் தாய், தந்தையரை அல்லது இருவரில் ஒருவரை இழந்த வறுமைக்கோட்டிற்குட்பட்ட 250 மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் நிதியுதவியாக வழங்கப்பட்ட அதேவேளை மேலும் 500 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதனிடையே சித்திரைப் புத்தாண்டையொட்டியதாக கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட விற்பனை காட்சிக் கூடங்களுக்கும் அமைச்சர் விஜயம் மேற்கொண்டதுடன் துறை சார்ந்தோருடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். (2-23)

## ஆறாம் திருத்தம் உள்ளவரை தமிழீழம் சாத்தியமற்ற விடயம்

### த.தே.மக்கள் முன்னணி தெரிவிப்பு

இலங்கையில் ஆறாம் திருத்தம் உள்ளவரை தமிழர்களின் தாயகமான தமிழீழம் சாத்தியமற்ற விடயம் என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள ஆறாம் திருத்தம் உள்ள வரை தமழர்கள் ஈழம் பற்றிய சிந்தனைக்கு வடிவம் ஏற்படாது. சர்வதேச தலையீடு ஒன்று ஏற்படுமாக இருந்தால் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு தமிழீழம் அமைய வாய்ப்பு உள்ளது.

அதனையும் மஹிந்த அரசு அனுமதிக்குமா என்பது சொல்ல முடியாது என லங்காசிறி வானொலியின் வட்டமேசை அரசியல் களம் நிகழ்வில் வினாக்களுக்கு பதில் அளிக்கையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார பொன்னமபலம் தெரிவித்தார். (2)

## மீனவர் பேச்சுவார்த்தை செயலிழக்க ஜெயாவின் நிர்வாகமே காரணம்

### அமைச்சர் வாசன் குற்றச்சாட்டு

இலங்கை- இந்திய மீனவர்களுக்கு இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை ஜெயலலிதாவின் தமிழக நிர்வாகத்தின் காரணமாக நடைபெறாமல் போனது என்று மத்திய கப்பல்துறை அமைச்சர் ஜீ.கே.வாசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இலங்கை-இந்திய மீனவர்கள் சென்னையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது கொழும்பில் நடைபெறவுள்ள இரண்டாவது சந்திப்பில் தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வது என்று இரண்டு தரப்பும் இணங்கியிருந்தன.

மத்திய அரசாங்கம் இதற்கான ஏற்பாடுகளை பூர்த்தி செய்திருந்த போதும், தமிழக அரசாங்கத்தின் நிபந்தனைகள் காரணமாகவே பேச்சுவார்த்தை நடைபெறாமல் போனது என்று வாசன் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

## அச்சுறுத்தல்களை தகர்த்தெறிய இராணுவத்தினர் தயாராக வேண்டும்

### இராணுவத் தளபதி கோரிக்கை

நாட்டை பிரிப்பதற்காக வெற்றியளிக்காத பல்வேறு முயற்சிகள் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் மேற்கொளளப் படுவதாக இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் சமாதானம் மற்றும் மறுசீரைமப்பு நடவடிக்கைகளை குழப்பியடிப்பதற்காக பிரிவினை வாதிகள் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான அச்சுறுத்தல்களை தகர்த்தெறிய இலங்கை இராணுவத்தினர் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புதுவருடப் பிறப்பை பயன்படுத்தி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான சிறந்த உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...நித்திய இளமை பெறுவதற்கும் ஆயுள் கூடுவதற்கும் இந்தப் புல்லை பாலில் அரைத்து ஒரு மண்டலம் சாப்பிட வேண்டும் என்று சித்தர் பாடல்களில் படித்தது ஞாபகம் வந்தது. ஒரு புல்லை ஒடித்து முகர்ந்து பார்த்தேன். முந்திரிப்பழம் வாசம் வந்தது. அந்த வாசத்தைக் கண்டவுடன் தான் வேறொரு ஞாபகமும் வந்தது.

இவ்வளவு அடர்த்தியான மலைப் புல்லினூடே மலைப் பாம்போ அல்லது வேறு காட்டு மிருகங்களோ பதுங்கியிருந்தால் என்னாவது? என்ற பயத்தைச் சொல்ல, இருந்தாலும் இருக்கலாம், எல்லாம் அந்த மகாலிங்கய்யா பார்த்துக்குவார்.

இதுவரை எந்த அசம்பாவிதங்களும் இங்கு நிகழ்ந்ததில்லை. தன்னைப் பார்க்க வரும் பக்தர்களுக்கு எங்கும் வியாபித்திருக்கும் சித்தர்கள் வாயிலாக ம்முழுப் பாதுகாப்பை இன்னமும் தந்து கொண்டுதான் இருக்கிறார். அந்த மகாலிங்கய்யா; ஆகவே பயப்படாமல் என்னைப் பின்தொடருங்கள் என்றார் நாகராஜ்.

இதுவரையில் அச்சமற்று பயணத்தைத் தொடர்ந்த நண்பர்களுக்கு இப்போது காட்டு மிருகங்களைப் பற்றிய அச்சம் ஏற்படவே நடையில் வேகம் குறைந்தது.

வேகமாக நடைபோட்ட நாகராஜ் சட்டென ஓரிடத்தில் நின்றுவிட்டார். அவரைப் பின்தொடர்ந்த எங்களுக்கு அவர் ஏதோ சமிக்ஞை செய்வது புரிந்தது. அதுவரை கலகலப்பாகப் பேசிக் கொண்டு வந்து நாங்கள் மௌனமானோம்.

புற்களினூடே மறைந்து நின்ற அவர் எதிரே சுட்டிக் காட்டினார்.

எதிரே பெரும் பாறைகள் நிறைந்த வெட்டவெளி அந்தப் பாறையினூடே



பதஞ்சலி குகை

ஓடும் ஒரு சிற்றாறு. ஒரு குளியல் போடலாம் போலத் தோன்றுகிறது. பாறைக்கு எதிரே பாதையொன்று செல்கிறது.

அந்தப் பாதையின் குறுக்கே நிழலில் நான்கு யானைகள் படுத்துக் கொண்டிருந்தது துல்லியமாகத் தெரிந்தது. நாங்கள் செல்ல வேண்டிய பாதைதான் அது.

யானை எப்போ கிளம்பறது? நாங்க எப்போ போகிறது? சோர்வும், பயமும் மனங்களில் எதிரொலித்தது. இந்த இடங்களில் யானைகள் மனிதர்களைப் பார்த்தால் துரத்த ஆரம்பித்து விடுமாம்.

புற்களினூடே மறைந்து சென்று வேறு வழியாகச் செல்ல முடியுமா? என்று நாகராஜ் யோசித்துக் கொண்டிருந்தார்.

நல்லவேளையாக யானைகள் எழுந்து புறப்பட ஆரம்பித்தன. மிக மெதுவாக அடிமேல் அடி வைத்து சாவகாசமாக அசைந்து சென்றன. எங்களின் அவசரம் அவைகளுக்குப் புரியுமா என்ன.

பொதுவாக மேட்டில் வேகமாக ஏறும் யானைகள் இறக்கத்தில் மெதுவாகத்தான் நடக்குமாம். யானைகளும் அப்படித்தான் மிக நிதானமாக கீழிறங்கிக் கொண்டிருந்தன. சுமார் ஒருமணி நேரம் நின்ற வண்ணமே யானை செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு நகர ஆரம்பித்தோம்.

## ஆன்மீகம் 92

### சித்தர் குளம்

நீண்டதொரு ஆறு சென்ற பாதையைப் போல பெரிய இடைவெளி அதனிடையே சிறியதொரு நீரோடை சென்று கொண்டிருந்தது. மழைக் காலங்களில் இரு கரைகளையும் தொட்ட வண்ணம் நீர் செல்லுமாம்.

காட்டினுள்ளே யானைகள் நீரருந்தும் பெரிய குளம் தூர்ந்து போய்விட்டதால் இந்த இடத்தில்தான் யானைகள் குளித்துவிட்டு நீரருந்திச் செல்கின்றதாம். சில சமயங்களில் சிறுத்தை கூட இங்கு வருவதைக் கண்டதாக நாகராஜன் தெரிவித்தார்.

சித்தர் குளத்தில் நீர் வற்றியதால் யானைகள் மட்டுமல்ல சித்தர்கள்கூட இங்குதான் நீராடிச் செல்வதாக கூறப்படுகிறது. அதனால்தான் இந்தப் பாறைப் பகுதிக்கு சித்தர்குளம் என்ற பெயரும் வந்ததாம்.


ஆற்றைக் கடந்து பாறையின் மேல் அமர்ந்து நடந்து வந்த களைப்பு தீர சற்று ஓய்வெடுத்தோம்.

அப்போது கையில் சில பச்சிலைகளுடன் திரும்பிய நாகராஜ் அவைகளைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். மிக இனிப்பாக இருந்தது.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



11

...நூலகத்தில் உறுப்பினராக ஆசை.

ஆனால் அதற்குக் கட்டணம் ஐந்து ரூபாய்.

அப்போது ஐந்து ரூபாய் என்பது எனக்கு ஐந்தாண்டுத் திட்டமாயிற்றே.

என்ன செய்வது என்று ஏங்கி நின்றபோது என் மீது பூமாரி பொழிந்தீர்கள்.

உங்கள் நூலக அட்டைகளை எனக்கு வழங்கி என் மனசை மயிலிறகால் வருடினீர்கள்.

அதன்பிறகு எனக்கு முளைத்த சிறகுகளை என் சொல்ல!

இந்த உலக உருண்டையே என் உள்ளங்கையில் சுற்றியதை என் சொல்ல!

ஒரு ஞாயிற்றுக்கிழமை என்னை உங்கள் வீட்டுக்கு வரச் சொன்னீர்கள்.

என் தாழ்வு மனப்பான்மை தடுத்தது.

ஆனால் உங்கள் அன்பு என்னை அழைத்தது.

வெறுங்கையோடு போகக்கூடாது என்பது மட்டும் அந்தச் சின்ன வயதிலேயே எனக்குத் தெரிந்தது.

என்ன கொண்டு செல்வது?

மலிவாகவும் உயர்வாகவும் இருக்கும் பொருள் யாது?

பூ என்று மனம் சொல்கிறது.

நீங்கள் மல்லிகையோ, கதம்பமோ சூடிப் பார்த்ததில்லை.

ரோஜாதான்.


எப்போதாவது ஓர் ஒற்றை ரோஜாதான்.

பூக்கடையில் அலைகிறேன்; ரோஜா இல்லை.

பூந்தோட்டங்களில் அலைகிறேன்; ரோஜாச்செடி இருக்கிறது; ரோஜா இல்லை.

முட்களை நிரந்தரமாகவும்; ரோஜாக்களை எப்போதாவதும் வெளியிடுகிற ரோஜாச் செடியே! நீ முட்களை எப்போதாவதும் ரோஜாக்களை நிரந்தரமாகவும் வெளியிடப் போவது எப்போது? என்று அங்கேயே அழுது கவிதை எழுதுகிறேன்.

கடைசியில் எங்கள் தோட்டத்தில் பிஞ்சுக் கத்திரிக்காய் பிடுங்கிக் கொண்டு துவாரகைக்குள் நுழையும் குசேலன் மாதிரி தயங்கித் தயங்கி உங்கள் வீட்டுக்குள் நுழைகிறேன்.




எனக்கு நீங்கள் பெயர் தெரியாத ஒரு பலகாரம் தந்ததாய் ஞாபகம்.

ஒரே ஒரு கேள்வியைக் கேட்க வந்து கேட்காமலே திரும்பிப் போனேன்.

உங்களுக்கு எப்போது கல்யாணம்?

என்னைப் பார்த்து மாணவர்கள் சிரிக்கிறார்கள்.

எனக்குத் தெரியாத வாக்கியங்களால் என்னைப் பற்றிப் பேசுகிறார்கள்.

எனக்கு வேறொரு பெயர் வைத்து விளிக்கிறார்கள்.

பிரார்த்தனைக் கூட்டத்தில் நான் செய்தி வாசிக்கப் போனால் முகவரி சொல்லாத சில கூழாங்கற்கள் என் முதுகில் விழுகின்றன.

காலுக்குக் கீழே ஒரு நெருப்பு ரகசியமாய்ப் பரபரவென்று பரவுவதாய்த் தெரிகிறது.

நான் விளங்காமல் விழிக்கிறேன்.

எனக்கு உலகியலறிவு இப்போது போலவே அப்போதும் குறைவு.

எனக்குத் தெரியாமல் என் நிழலின் தலையை யாரோ வெட்டுவதாய் எனக்குத் தெரிகிறது.

என்னால் பொறுக்க முடியவில்லை.

ஒருநாள் என்னைப் பரிகசித்த கூட்டத்துக்குள் பாய்ந்து கேட்டேன்.

என்னடா என்னைப் பார்த்துக் சிரிக்கிறீங்க.

கூட்டத்தில் இருந்த ஒருவன் என்னைப் பார்த்துக் குதர்க்கமாய்ச் சொல்கிறான்.

போய் டீச்சரக் கேளுடா அவ்வளவுதான்.

ஒல்லியாயிருந்த என் இரண்டு கைகளும் இரும்புத் தடிகளாயின.

அவனைச் சரளைக் கல்லில் போட்டுப் புரட்டுகிறேன்.

என்னை அவன் கழுத்தைப் பிடித்து நெரிக்கிறான்.

நான் அவன் தலைமுடி பிடித்துத் தரையில் உரசுகிறேன்.

சிராய்ப்புகள்; இருவருக்கும் சிராய்ப்புகள்.

என் கணுக்காலில் ரத்தம் கசிகிறது.

மறுநாள் மஞ்சள் பத்துப் போட்டுக் கொண்டு பள்ளிக்கு வருகிறேன்.

என்ன இது காயம்? என்று கேட்டீர்கள் டீச்சர்.

நல்லவேளை; என்னைத் தென்னை மரம் காப்பாற்றியது.

அதன் பிறகு உங்களை நான் அடிக்கடி ஏன் பார்ப்பதில்லை என்று நீங்களும் கேட்கவில்லை; நானும் உங்களுக்குச் சொல்லவில்லை.

உங்களை நான் பார்த்து இருபத்தொரு ஆண்டுகள் இருக்கும்.

அநேகமாய் வாழ்க்கையின் இரண்டாம் பாகத்துக்கு வந்திருப்பீர்கள்.

காலத்தின் கையிலிருக்கும் தூரிகை உங்கள் மீதும் சில கோடுகளை எழுதியிருக்கக் கூடும்.

இப்போதாவது சொல்லுங்கள்.

என்னை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா டீச்சர்?

உங்களை எனக்கு ஞாபகமிருக்கிறது.

ஆமாம்! இப்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் டீச்சர்?

-வைரமுத்து-

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

777

## பாகப்பிரிவினை

...தொடர்ந்து. "உன் தந்தையும் என்னைப்போல் வயதானவர். அவர் இதை உண்பதால் பயனில்லை. ஆகவே, அவருடைய மூத்த மகனான



உனக்கு இதை அளிக்கிறேன். பெற்றுக் கொள்வாய்!" என்று அதை அவனிடம் கொடுத்தார். அவனும் பழத்தைப் பெற்றுக் கொண்டு அங்கேயே தின்று விட்டு சென்று விட்டான்.

அதன் பிறகு, குமரன் இரண்டாவது மகன் ராகவனை அழைத்து, தான் முன்பு ரகுபதியிடம் கூறியதை அப்படியே அவனிடமும் சொல்லி விட்டு, மற்றொரு பழத்தை அளித்தார்.

உடனே ராகவன், "இத்தனை அபூர்வ சக்தி வாய்ந்த பழத்தை நான் ஒருவன் மட்டும் உண்டால் அது நன்றல்ல! இதை என்னுடைய சகோதரர்கள், அவர்களது மனைவிமார்கள், என் தந்த்தை ஆகிய அனைவருடனும் பகிர்ந்து கொண்டு உண்பதே நல்லது! அதற்கு அனுமதி தந்தீர்களானால் நான் மகிழ்ச்சி அடைவேன்!" என்றான்.

அவ்வாறே அவனை செய்ய அனுமதியளித்த பிறகு, கடைசிப் பிள்ளை ராஜாராமனை அழைத்தார். அவனிடமும் மற்றவர்களிடம் கூறியதைத் அப்படியே சொன்னார்.

அதற்கு ராஜாராமன், "என் மனைவியும், மகனும் இதை உண்டு நீண்ட ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வர்யம் ஆகியவற்றைப் பெற்றால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி தருவது வேறு ஒன்றுமிலலை. அதனால், இதை அவர்களுக்குத்தர விரும்புகிறேன்!" என்றான்.

பிறகு, குமரன் ஜெயராமனை சந்தித்து, "உன் பிள்ளைகளில் இரண்டாவது மகன் ராகவனிடம் உன்னுடைய வீட்டை அளித்து விடு. அவன் ஒருவன் மட்டுமே உன் விருப்பத்தை நிறைவு செய்யக் கூடியவன்.

இந்த வீடு அவனிடம் இருந்தால், அது அன்னபூரணி வாசம் செய்யுமிடமாக இருக்கும்!" என்றார்.

'இந்த முடிவிற்குக் காரணம் என்ன?" என்று ஜெயராமன் கேட்க, குமரன் நடந்ததை விவரமாக விளக்கினார்.

பிறகு, "உன்னுடைய பிள்ளைகள் மூவருமே நல்லவர்கள். ஆயினும், உன்னுடைய மூத்த மகன் ரகுபதி சுயநலக்காரன்.

மூன்றாவது மகன் ராஜாராமன் தன்னுடைய மனைவ, மகன் மீது மட்டுமே அன்பு செலுத்துகிறான். ராகவன் ஒருவன் மட்டுமே தான், தன் குடும்பம் என்று நின்றுவிடாமல், தன் தந்தை, தன் சகோதரர்கள், மீதும் ஈடுபாடு கொண்டவன்.



நீ செய்து வரும் தான தருமங்கள் தொடர வேண்டுமெனில், நீ அவனுக்கு உன்னுடைய வீட்டை அளிப்பதே நல்லது! அவர்களுடைய குணத்தை அறிந்து கொள்வதற்காக, இமயமலை யோகி அளித்த அபூர்வ சக்திவாய்ந்த பழங்கள் என்று சொன்னேன். உண்மையில், அந்தப் பழ்ங்கள் என் தோட்டத்தில் விளைந்த சாதாரண பழங்கள்!" என்றார்.

"நண்பனே! மிகவும் புத்திசாலித் தனமாக செயற்பட்டு, என்னுடைய பிரச்சினையைத் தீர்த்து வைத்ததற்கு மிகவும் நன்றி" என்று ஜெயராமன் குமரனிடமிருந்து விடைபெற்றார்.

சிலநாட்கள் கழித்து ஜெயராமன் தன் சொத்துகளை முறையாக பாகப்பிரிவினை செய்தார். மூன்று பிள்ளைகளுக்கும் அவரவர்கள் செய்து வந்த வியாபாரங்களை அவர்களுக்கே உரிமையாக்கினார்.

சொத்துகளை இரண்டாகப் பரித்து மூத்த மகனுக்கும், கடைசி மகனுக்கும் அளித்தார். அவனும் தன் தந்தையைப் போல் நடக்கலானான்....

(முற்றும்)

## 15.04.2014 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1450 - பிரான்சின் போர்மிக்னி என்ற இடத்தில் ஆங்கிலேயரின் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்ததன் மூலம் வடக்கு பிரான்சில் ஆங்கிலேயரின் அதிகாரம் முடிவுக்கு வந்தது.
- 1755 - சாமுவேல் ஜோன்சன் என்பவர் தனது ஆங்கில அகராதியை வெளியிட்டார்.
- 1815 - சல்லி என்றழைக்கப்பட்ட டச்சு செப்பு நாணயம் இலங்கையில் அறிமுகமானது.
- 1865 - ஜோன் பூத் என்பவனால் முதல் நாள் சுடப்பட்ட ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் இறந்தார். ஆன்ட்ரூ ஜோன்சன் அமெரிக்காவின் 17 ஆவது ஜனாதிபதியானார்.
- 1892 - ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனம் உருவாக்கப்பட்டது.
- 1912 - ஏப்ரல் 14, 1912 அன்று இரவு 11:40 மணிக்கு வட அட்லாண்ட்டிக் பெருங்கடலில் பாறை ஒன்றுடன் மோதிய பிரித்தானியாவின் டைட்டானிக் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 1503 பேர் பலியாகினர்.
- 1923 - இன்சுலின் முதன் முதலாக நீரிழிவு நோய்க்கு மருந்தாகப் பாவிக்கப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நாசிப் படைகளினால் கைப்பற்றப்பட்டிருந்த நோர்வேயின் நார்விக் நகர் மீது கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தின.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் 200 போர் விமானங்கள் வட அயர்லாந்தின் பெல்பாஸ்ட் நகர் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியில் நாசிகளின் பேர்ஜேன்-பெல்சன் வதைமுகாம் பிரித்தானியப் படையினரால் விடுவிக்கப்பட்டது.
- 1986 - லிபியா மீது ஐக்கிய அமெரிக்கா விமானத் தாக்குதலை நடத்தியது.
- 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்க ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.
- 1976 - தமிழ்நாட்டில் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1452 - லியனார்டோ டா வின்சி, இத்தாலிய ஓவியர் (இ. 1519)
- 1469 - குரு நானக் தேவ், சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் (இ. 1539)
- 1707 - லியோனார்டு ஆய்லர், சுவிட்சர்லாந்து நாட்டின் கணிதவியலாளர் (இ. 1783)
- 1874 - ஜொகான்னஸ் ஸ்டார்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ. 1957)
- 1896 - நிக்கொலாய் செமியோனொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (இ. 1986)
- 1907 - நிக்கலாஸ் டின்பேர்ஜென், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1988)

### இறப்புகள்

- 1865 - ஆபிரகாம் லிங்கன், ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி (பி. 1809)
- 1980 - ஜீன்-போல் சார்ட்டர், நோபல் பரிசினை ஏற்க மறுத்த பிரெஞ்சு மெய்யியலாளர் (பி. 1905)

### டைட்டானிக்



ஆர்.எம்.எஸ் டைட்டானிக் (RMS Titanic) என்பது ஒரு ஆடம்பர பயணிகள் கப்பல் ஆகும். இது வட அயர்லாந்தில் பெல்பாஸ்ட் நகரில் உருவானது. 1912 இல் முதன் முதலாகச் சேவைக்கு விடப்பட்டபோது இதுவே உலகின் மிகப் பெரிய பயணிகள் நீராவிக் கப்பலாகும். டைட்டானிக் தனது முதற் பயணத்தின் போது ஏப்ரல் 14, 1912 இல் இரவு 11:40 மணிக்கு வட அட்லாண்ட்டிக் பெருங்கடலில் பனிப்பாறை ஒன்றுடன் மோதியது. மோதி 2 மணி 40 நிமிடங்களில் ஏப்ரல் 15, 1912 இல் முற்றாக மூழ்கியது.

டைட்டானிக் கடலில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 1503 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு அமைதிக்காலத்தில் நடந்த மிகப்பெரும் கடல் அழிவாகக் கருதப்பட்டது.


டைட்டானிக் கப்பல் அக்காலத்தில் மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கொண்டு கட்டப்பட்டதாகவும் அது மூழ்கவே முடியாததெனவும் கருதப்பட்டது. இப்படியான ஒரு கப்பல் மூழ்கியது் உலகெங்கும் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. கப்பலின் சேதமடைந்த பகுதிகளை செப்ரெம்பர் 1, 1985 இல் றொபேர்ட் பலார்ட் தலைமையிலான ஆய்வாளர் குழு ஒன்று கண்டு பிடித்தது.

#### பேரழிவு

ஞாயிற்றுக்கிழமை, ஏப்ரல் 14 இல் வெப்பநிலை குறைந்து கிட்டத்தட்ட உறைநிலையை அடைந்தது. கடல் மிகவும் அமைதியாக இருந்தது. 1:45 மணிக்கு அமெரிக்கா என்ற கப்பலில் இருந்து டைட்டானிக்குக்கு வழியில் பனிப்பாறைகள் உள்ளதாக செய்தி அனுப்பப்பட்டது. ஆனாலும் இச்செய்தி டைட்டானிக்கை அடையவில்லை. இரவு 11:40 மணிக்கு பெரும் பனிப்பாறை ஒன்றுடன் டைட்டானிக் மோதியது. கப்பல் முற்றாக நிறுத்தப்பட்டது. பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கப்பலில் இருந்து ஆபத்து சமிக்கைகள் பல திசைகளிலும் அனுப்பப்பட்டன. அண்மையில் இருந்த சில கப்பல்களுக்குச் செய்திகள் அனுப்பின. ஆனாலும் அவை எதுவும் டைட்டானிக்குக்கு அருகில் வருவதற்கு நேரம் போதவில்லை. சரியாக அதிகாலை 2:20 மணிக்கு கப்பல் முற்றாக மூழ்கியது. மொத்தம் இருந்த 2,223 பேரில், 706 பேர் மட்டுமே காபபாற்றப்பட்டனர். 1503 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் கடலில் 28 °F (-2 °C) குளிர் தாங்காமையினால் உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஜய” வருட ராசிபலன்கள்



**உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்**
**அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**ஆனி ஏழு முதல் அதிர்ஷ்டம் அரங்கேறும்!**

**பழகுபவர்களை எல்லாம் பாசத்தால் வசமாக்கும் கன்னி இராசி நேயர்களே!**

புத்தாண்டு ஜய வருடம் பொன்னான எதிர்காலத்தை வழங்கப் போகிறது. எத்தனை நாட்கள் தான் இன்னும் இந்த ஏழரைச் சனி இருக்கும் என்றெல்லாம் நீங்கள் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். வருடத் தொடக்கத்திலேயே சனி வக்ரம் பெறுகிறார். வளர்ச்சியைக் கொடுப்பது உங்களுக்கு சனிதான். தளர்ச்சியைக் கொடுப்பதும் சனிதான்.

**கிரக நிலைகள்**

பொதுவாக வருடத் தொடக்கத்தில் உலா வரும் கிரக நிலைகள் எப்படி வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். லாபாதிபதி சந்திரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். தனாதிபதியையும், தன ஸ்தானத்தையும் குரு பார்க்கிறார் அஷ்டமாதிபதி வக்ரம் பெற்றுவிட்டார். அப்புறம் என்ன? பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

## சிவல்புரி சிங்காரம்

கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான புதன் நீச்சம் பெற்று சஞ்சரிப்பது யோகம் தான். மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். சேமிப்பு உயரும்.

சூரியன் கேது சேர்க்கையும், சொல்லைச் செயலாக்கிக் காட்டும், வாக்கு ஸ்தானத்தில் ராகுவின் சஞ்சாரமும் இருப்பதால் எதையும் கொஞ்சம் யோசித்துச் சொல்வது நல்லது.

**எப்படியிருக்கும் ஜய வருடம்?**

அன்பு மனதோடு அனைவரிடமும் பழகுபவர்கள் நீங்கள். பண்பில் தலைசிறந்த பண்பு விருந்தோம்பல். வந்த விருந்தினரை வரவேற்பால் திணறடிப்பவர்கள் நீங்கள்.

கன்னி இராசியாக நீங்கள் இருப்பதாலும் களத்திர ஸ்தானாதிபதியாக குரு விளங்குவதாலும் எண்ணியபடியே இல்லறம் வாய்க்க திருமணப்பொருத்தம் பார்ப்பது நல்லது.

இப்படிப்பட்ட அமைப்புகளைப் பெற்ற உங்களுக்கு இந்தப் புத்தாண்டு எப்படிப்பட்ட வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப் போகிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக சனி மற்றும் செவ்வாயின் வக்ரத்தை நினைவில் கொள்ளுங்கள். குருவின் ஆதிக்கம் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் அமைந்திருக்கிறது. அதன் பார்வை உங்கள் இராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன.

இந்தப் புத்தாண்டு ஜய வருடத்தில் புதிய திருப்பங்கள் பலவும் காணப் போகிறீர்கள். பதவி மாற்றம், இடமாற்றம், பணிகளில் மாற்றம் உருவாகலாம்.

பொதுவாகத் தனாதிபதி பரிவர்த்தனை யோகம் பெற்று ஆண்டு தொடங்குகிறது. அதிலும் 6 ஆம் இடத்தில் பரிவர்த்தனை பெற்றுள்ளார். எதிர்ப்பு, வியாதி, கடன் என்பவற்றைக் குறிக்கும் இடத்தில் பரிவர்த்தனை பெற்றுள்ளதால் எதிரிகள் மனம் மாறுவர். இயல்பான வாழ்க்கையில் ஏற்பட்ட கடன்சுமை கொஞ்சம் குறையும்.

கலகலவென்று பேசிய நண்பர்கள் கைவிட்டு போய்விட்டார்களே என்ற கவலை இனி அகலும். களைப்பை மறந்து உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட ஏமாற்றங்கள் அகலும். உற்றார், உறவினர் உங்களிடம் பாசம் காட்ட தொடங்குவர்.

வரும் வருமானத்தில் பாதிக்கு மேல் வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதற்காக செலவிடுவீர்கள். மின்சாதனப் பொருட்களும் மேனிக்கு மெருகூட்டும் ஆபரணங்களையும் வாங்க முற்படுவீர்கள். பழைய நகைகளை எல்லாம் கொடுத்துவிட்டு புதிய நகைகளை வாங்கி ஜொலிக்கும் வண்ணம் அணிய வேண்டுமென்று ஆசைப்படுவீர்கள்.

வருடத் தொடக்கத்தில் செவ்வாய் வக்ரம் பெறுவது யோகம்தான். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். சகோதர சச்சரவுகள் அகலும். இல்லத்தில் சமாதானக் கொடி பறக்கும். சொத்துக்களை வாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் ஆதாயம் உங்களுக்கு கிடைக்கும்.

ஆறுக்கு அதிபதி வக்ரம் பெறுவதால்

## கன்னி



எதிரிகளின் தொல்லை குறையும். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். கூட்டாளிகள் கூடுதல் லாபம் தர முன்வருவர். குடும்பத்தில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**நலம் தரும் ராகு- கேது பெயர்ச்சி!**

ஆனி மாதம் 7 ஆம் திகதி (21.06.2014) அன்று கன்னி இராசியில் ராகுவும், மீன இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். வருடக் கடைசி வரை அங்கேயே இருக்கிறார்கள். ஜென்ம ராகு ஏற்ற, இறக்கமான வாழ்க்கையைக் கொடுக்கும். வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறி, மாறி வந்து கொண்டேயிருக்கும். தொழிலில் ஒருநாள் போதுமான வருமானம் கிடைக்கும், மறுநாள் பற்றாக்குறை பட்ஜெட் உருவாகும்.

குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கலாம். கூடுதல் விழிப்புணர்ச்சி இருந்தால் தான் மன அமைதி கிடைக்கும். சேமிப்பில் சிறிது கரையலாம். சிக்கனத்தைக் கையாள முற்படுவீர்கள். நண்பர்கள் விலகிச் செல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. என்ன இருந்தாலும் கன்னி இராகு பணப்புழக்கத்தை அதிகப்படுத்துவார். ஆனால், அதை வரைமுறைப்படுத்தி செலவழிக்க இயலுமா என்பது சந்தேகம்தான்.

ராகு- கேது பெயர்ச்சியின் மூலம் உங்களுக்கு சர்ப்ப தோஷத்தை உருவாக்குவதால் நாக ஸ்தலங்களுக்கு யோக பலம் பெற்ற நாளில் செல்ல வேண்டும். சர்ப்ப சாந்தியின் மூலம் நிரந்தர வருமானத்தை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**மூன்றாமிடத்திற்கு செல்லும் சனி பகவான்!**

ஜய வருடம் மார்கழி மாத தொடக்க நாள் முதல் மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். 5 க்கு அதிபதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பூர்வீக சொத்துக்களால் வந்த தகராறுகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும்.

பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். அவர்களின் கல்யாண வாய்ப்பு கருதியும், கடல்தாண்டும் முயற்சி கருதியும், கல்வி நலன் கருதியும் எடுத்த புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். 6 க்கு அதிபதி 3 இல் சஞ்சரிப்பதால் விபரீத ராஜயோகம் அடிப்படையில் சில செயற்பாடுகள் உருவாகும்.

நடக்காது என்று நினைத்த காரியம் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். கூட்டாளிகள் விலகினாலும் புதிய கூட்டாளிகள் வந்திணைவர். மாசி மாதம் 30 ஆம் திகதி முதல் வக்ர இயக்கத்திலேயே சனி சஞ்சரிக்கிறார். இக்காலத்திலும் எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தன வரவில் தடுமாற்றங்கள் ஏற்படும்.

**வழிபாட்டின் மூலம் நன்மை பெறும் காலம்!**

14.07.2014 முதல் 31.08.2014 வரை துலாம் இராசியில் செவ்வாய்- சனி சேர்க்கை உருவாகிறது. இக்காலத்தில் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம்தான். குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். துணிந்து செயற்படும் நீங்கள் பணிந்து செயற்பட வேண்டிய நேரமிது.

**குருப்பெயர்ச்சி பலன்கள்**

இதுவரை பத்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் வைகாசி 30 ஆம் திகதி அன்று (13.06.2014) லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிகிறது. அந்த இடமெல்லாம் புனிதமாகும். எனவே, முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் தென்படும். தூர தேசத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரலாம். குடும்ப ஒற்றுமை பலப்படும். வரன்கள் வாயிற் கதவைத் தட்டும்.

**மூன்றினை குருதான் பார்த்தால்,**
**முன்னேற்றம் அதிகரிக்கும்.**
**ஐந்தினைக் குருதான் பார்த்தால்,**
**அனைத்திலும் வெற்றி கிட்டும்.**
**ஏழினைக் குருதான் பார்த்தால்,**
**இல்லறம் சிறப்பாய் வாய்க்கும்!**
என்பது ஜோதிட நியதி.

எனவே, குருவின் பரிபூரண பார்வையின் பலனால் விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். வியக்குமளவு வாழக்கைத் தரம் உயரும். இல்லத்தில் காலம் காலமாக முயற்சி செய்தும் பாகப்பிரிவினை முடியாமல் பாதியிலேயே நிற்கிறதே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மகிழ்ச்சியடையும் வண்ணம் சொத்துப்பிரிவினைகள் ஏற்பட்டு சுகங்களையும், சந்தோஷங்களையும் வரவழைத்துக் கொள்வர். உச்சம் பெற்ற குருவின் வக்ர காலத்தில் மிச்சமின்றி செலவாகும் சூழ்நிலை உண்டு.

**கன்னி இராசியில் பிறந்த**



**பெண்களுக்கு!**

இடமாற்றச் சிந்தனை மேலோங்கும்

ஜய வருடத் தொடக்கத்தில் குரு பகவானின் பார்வையால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். வருமானம் இருமடங்காக உயரும். வங்கிச் சேமிப்பிலிருந்து வாங்க வேண்டிய விலை உயர்ந்த பொருட்களை வாங்கி வைப்பீர்கள். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் மற்றும் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம், இலாகா மாற்றம் உருவாகலாம். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் தாய் வழி ஆதரவு பெருகும். கணவன்- மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அகலும். இராகு- கேது பெயர்ச்சிக்குப் பிறகு சர்ப்பதோஷ ஆதிக்கம் வருவதால் பணப்புழக்கம் அதிகரித்தாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். சர்ப்ப சாந்தியை யோக பலம் பெற்ற நாளில் செய்வது நல்லது. சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு ஏழரைச்சனி விலகுவதால் சனி பகவானை வழிபட்டு வருவது நல்லது.

**சிறப்பு வழிபாடுகள்!**

பொதுவாக இராசிநாதன் புதன் என்பதால் புதன்கிழமை தோறும் விரதமிருந்து விஷ்ணுவை வழிபட்டு வருவது நல்லது. யோக பலம் பெற்ற நாளில் ஆஞ்சநேயரை வழிபட்டு நலன்களையும் வளங்களையும் வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**நாளை துலாம்....**

## ஆனி ஏழு முதல் அதிர்ஷ்டம் அரங்கேறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ப்பரேட் முதலாளிகள் நடத்தும் சூதாட்டம்!

"ஜனநாயகத்தின் அடிப்படையாக இருப்பது தேர்தல்கள்தான். தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள்தான் நாட்டை ஆளுகிறார்கள். நாடாளுமன்றம் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்ந்த நிறுவனம்" என்றவாறு தேர்தல்கள், நாடாளுமன்றம் பற்றிய நம்பிக்கையை முதலாளித்துவ ஊடகங்களும் அறிவுத்துறையினரும் பொதுமக்களிடம் உருவாக்கி வைத்துள்ளனர்.

ஓட்டுக்கட்சிகள் கிரிமினல்மயமாகியிருப்பது, ஓட்டுச் சீட்டு அரசியலே பொதுச்சொத்தைக் கொள்ளையடிப்பதற்கான எளிதான வழியாக, பிழைப்புவாதமாக மாறியிருப்பது, எங்கும் இலஞ்சம், ஊழல், அதிகாரமுறைகேடுகள் பெருத்துப் போயிருப்பது என இந்த அமைப்பு முறை அழுகிப் போயிருப்பதைக் காணும் மக்கள், இந்த தேர்தல்கள், ஓட்டுக்கட்சிகள், நாடாளுமன்றம் உள்ளிட்ட அரசு அமைப்புகள் மீது நம்பிக்கை இழந்துவரும் நிலையிலும், தேர்தல்கள், நாடாளுமன்றம் உள்ளிட்ட இந்த அமைப்பு முறையை விட்டால் வேறு மாற்று இல்லை என்றே இவர்கள் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தல் அரசியல் சீரழிந்து போயிருப்பதற்கு ஓட்டுக்கட்சிகள், அதனின் தலைவர்கள், தனிப்பட்ட அதிகாரிகள் ஆகியோரின் மீது பழிபோட்டுவிட்டு, இந்த அமைப்பு முறைக்கும் அக்கேடுகளுக்கும் எந்தவொரு சம்பந்தமும் கிடையாது என இவர்கள் வாதிடுகிறார்கள்.

ஓட்டுக்குப் பணம் வாங்காமல், கட்சிகளைப் பாராமல், சாதி - மதச் சார்பு இல்லாமல், நல்லவர்களைத் தேர்ந்தெடுத்தால் நாடாளுமன்ற ஜனநாயகம்போல மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய அமைப்பு வேறு எதுவும் கிடையாது என இவர்கள் உபதேசிக்கிறார்கள். ஊழல், அதிகாரமுறைகேடுகள் உள்ளிட்ட கேடுகள் அனைத்தையும் தானாகவே திருத்திக் கொள்ளும் வாய்ப்புகள் (ஜன் லோக்பால் போன்றவை) இந்திய நாடாளுமன்ற அமைப்பு முறைக்குள் கொட்டிக் கிடப்பதாகக் கூறி இவர்கள் மக்களுக்கு நம்பிக்கையூட்டுகிறார்கள்.

"நாடாளுமன்றம் என்பது முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியை மூடிமறைக்கும் திரைச்சீலை" என்ற லெனினின் வரையறுப்புக்கு முற்றிலும் எதிராக, "மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளை எழுப்புவதில் நாடாளுமன்றம் உயர்ந்த அமைப்பு வடிவமாகும். எனவே, இந்திய நாடாளுமன்றம் முடமாகிப்போனால், இந்திய ஜனநாயகத்திற்கே ஆபத்தாக முடியும்" என எச்சரிக்கிறார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் குருதாஸ் தாஸ் குப்தா. அரசனை விஞ்சிய ராஜ விசுவாசி!

"மாற்றம் வேண்டும்" என்ற அடிப்படையில் வாக்களிப்பதாகக் கூறும் படித்த நடுத்தர வர்க்கத்தினர்கூட, தேர்தல்கள் மூலம் ஒரு கட்சிக்குப் பதிலாக இன்னொரு கட்சியைப் பதவியில் அமர்த்தினால் மாற்றம் வந்துவிடும் எனப் பாமரத்தனமாகத்தான் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையைப் புரிந்து வைத்துள்ளனர்.



மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள்தான் நாட்டை ஆளுவதாகக் கூறப்படுவதே ஒரு வடிகட்டிய பொய். நாடாளுமன்றத்திற்குச் சட்டமியற்றும் அதிகாரம்தான் உண்டே தவிர, அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு அப்பால் தனித்து இயங்கிவரும் அதிகார வர்க்கத்திற்குத்தான் உண்டு.

மேலும், நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்களையும் இந்த அதிகார வர்க்கம்தான் வடிவமைத்துத் தருகிறது. இந்த அதிகார வர்க்கம் நாடாளுமன்றம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சுயேச்சையாக இயங்கக் கூடியது. இந்த அதிகார வர்க்கத்தை நியமிக்கும், கட்டுப்படுத்தும் அதிகாரமும் நாடாளுமன்றத்திற்குக் கிடையாது.

இதுவொருபுறமிருக்க, தனியார்மயம் புகுத்தப்பட்ட பிறகு இந்திய நாடாளுமன்றத் தின் நடவடிக்கைகளை ஒருமுறை அலசிப் பாருங்கள். இந்திய மக்களின் மீது மானிய வெட்டு, விலைவாசி உயர்வு, நில அபகரிப்பு எனப் பல்வேறு தாக்குதல்களைத் தொடுத்து அவர்களை ஓட்டாண்டிகளாக்கிய அதேசமயம், ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கும், அவற்றின் கூட்டாளிகளான இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் பல்வேறு சலுகைகளை அளித்து, அதன மூலம் அக்கும்பல் நாட்டின் வளங்களைக் கொள்ளையடிக்கவும் அதிரடி இலாபம் அடையவும் ஏற்பாடு செய்து கொடுக்கும் கருவியாக நாடாளுமன்றம் செயல்பட்டு வரும் உண்மை தெரிய வரும்.

இந்திய நாடாளுமன்றம் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் நலன்களைப் பாதுகாக்கும் கருவியாக இருப்பதை ஓட்டுக் கட்சிகளின் சொந்த விருப்பு வெறுப்பாக, ஓட்டுக் கட்சிகள் மக்கள் மீது அக்கறையற்று இருப்பதன் வெளிப்பாடாகவோ சுருக்கிப் பார்த்துவிடக் கூடாது.

1990- களில் புகுத்தப்பட்ட புதிய தாராளவாதக் கொள்கைகளுக்கு ஏற்ப அரசின் கட்டுமானங்கள் மாற்றி அமைக்கப்பட்டு வருவதன் வெளிப்பாடு இது.

உலக வர்த்தகக் கழகம் 1947-க்குப் பிந்தைய இந்திய நாடாளுமன்றத்தின் செயல்பாடுகளைத் தனியார்மயத்திற்கு முன், தனியார்மயத்திற்குப் பின் என இரண்டாகப் பிரிக்கலாம். தனியார்மயத்தின் முன்பு இந்திய நாடாளுமன்றம் டாடா, பிர்லா, டி.வி.எஸ்., உள்ளிட்ட சில குறிப்பிட்ட தரகு முதலாளித்துவ குடும்பங்களுக்குச் சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுவந்த போதும் நாட்டின் சுதேசித் தொழில்களையும், இயற்கை வளங்களையும் ஏகாதிபத்தியக் கொள்ளையர்களிடமிருந்து காக்கும் அரைகுறையான சுதேசி பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை நிலவியது. இதனால் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் பெயரளவிலான அதிகாரத்தை நாடாளுமன்றம் கொண்டிருந்தது. மேலும், மக்கள் நல அரசு எனத் தன்னைக் காட்டிக் கொள்வதற்காகவே ஒப்புக்குச் சப்பாணியாகச் சில நடவடிக்கைகளை - கல்வி, மருத்துவம், மின்சாரம் மற்றும் குடிநீர் விநியோகம் போன்ற அத்தியாவசியமான சேவைகளை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பது- எடுத்து வந்தது.

1991-ஆம் ஆண்டு பதவிக்கு வந்த நரசிம்ம ராவ் அரசு, உலக வங்கியின் கட்டளைகளை ஏற்று இந்தியப் பொருளாதாரத்தை மறுசீரமைக்கத் தொடங்கிய பின், இந்திய நாடாளுமன்றத்தின் பெயரளவிலான அதிகாரமும் சுயேச்சைத் தன்மையும் முற்றிலும் பறிக்கப்பட்டதோடு மட்டுமின்றி, மக்கள் நல அரசு என்ற முகமூடியையும் கழட்டி விட்டது. அதனைத் தொடர்ந்து "காட்" ஒப்பந்தத்தில் கையெழுத்திடு உலக வர்த்தகக் கழகத்தில் இணைந்த நாள் தொடங்கி, இந்திய நாடாளுமன்றமும், அரசின் பிற உறுப்புகளும் அந்நிய நிதி மூலதனத்தின் கட்டளைகளை நிறைவேற்றும் ரப்பர் ஸ்டாம்பாகவே மாறிவிட்டன.

நரசிம்ம ராவ் தலைமையில் இருந்த காங்கிரசு அரசு "காட்" ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது கூட, நாடாளுமன்றத்திற்குத் தெரிவிக்காமலேயே, அது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்காமலேயே நடந்து முடிந்தது. இந்தச் சம்பவம் ஒன்றே இந்திய நாடாளுமன்றம் இனி சோளக்காட்டு பொம்மை போன்றது என்பதை எடுத்துக் காட்டியது.

"காட்" ஒப்பந்தம் கொல்லைப்புற வழியில் நாட்டின் மீது திணிக்கப்பட்டபோதும், நரசிம்ம ராவ் அரசிற்குப் பின் பதவிக்கு வந்த, போலி கம்யூனிஸ்டுகளின் ஆதரவைப் பெற்றிருந்த ஐக்கிய முன்னணி அரசும், அதற்குப் பின் பதவிக்கு வந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியும் ஏகாதிபத்திய நிறுவனங்களுக்குச் சேவை செய்வதில் முந்தையதைவிட விசுவாசமாக நடந்து கொள்வதிலேயே குறியாக இருந்தன.

குறிப்பாக, வாஜ்பாய் தலைமையில் இருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு உலக வர்த்தகக் கழகத்தின் நிபந்தனைகளுக்கு அப்பாலும் சென்று, 640 பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது.

இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தமும், இந்திய-அமெரிக்க இராணுவக் கூட்டு ஒப்பந்தமும்கூட நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல்தான் மன்மோகன் சிங் அரசால் கையெழுத்திடப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் இந்தியாவின் சிவில் அணுஉலைகளைக் கண்காணிக்கும் அதிகாரத்தை ஏகாதிபத்திய நாடுகளுக்கு அளித்தது. அமெரிக்காவைச் சேர்ந்த அணுசக்தி நிறுவனங்களை தாஜா செய்வதற்காகவே, அணுசக்தி கடப்பாடு மசோதா நீர்த்துப் போன வடிவத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வோடோஃபோன் நிறுவனம் 11,000 கோடி ரூபாய் அளவிற்கு வரி ஏய்ப்பு செய்த விவகாரம் அம்பலமான பிறகு, கார்ப்பரேட் நிறுவனங்களின் வரி ஏய்ப்புகளைத் தடுக்கப் போவதாகக் கூறிக்கொண்டு, பொது வரி தவிர்ப்பு விதிமுறைகளை நாடாளுமன்றத்தில் கொணடு வந்தது, காங்கிரசு கூட்டணி அரசு.

பன்னாட்டு நிறுவனங்கள் இப்புதிய விதி முறைகளைத் தீவிரமாக எதிர்த்தவுடனேயே, அதனை அமுலுக்குக் கொண்டுவருவது கிடப்பில் போடப்பட்டது. "மன்மோகன் சிங் செயற்படாத பிரதமர்" என மேற்கத்திய ஊடகங்கள் அபாயச் சங்கை ஊதியவுடனேயே சில்லறை வர்த்தகம் தொடங்கி ஆயுதத் தளவாட தயாரிப்பு உள்ளிட்டு பல்வேறு துறைகளில் அந்நிய மூலதனம் நுழைவதற்கு இருந்துவந்த கட்டுப்பாடுகளை நீக்குவதாகத் தன்னிச்சையாக அறிவித்தார், மன்மோகன் சிங்.

உலக வர்த்தகக் கழகத்தின் விதிகள், குறிப்பாக அறிவுசார் சொத்துரிமை விதிகள் (TRIPS) மற்றும் நிதி முதலீட்டு விதிகளுக்கு (TRIMS) மாறாக, இந்திய நாடாளுமன்றம் எந்தவொரு சட்டத்தையும் இயற்றிவிட முடியாது.

இந்தியா எந்தெந்த பொருட்களை எவ்வளவு இறக்குமதி செய்ய வேண்டும். எந்தெந்த பொருட்களை எந்த அளவிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதையெல்லாம் உலக வர்த்தகக் கழகம்தான் தற்பொழுது தீர்மானிக்கிறது.

பட்ஜெட் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்திய அரசு உருவாக்கி வைத்திருக்கும் சட்டம், உலக வங்கியின் நிபந்தனைப்படி இயற்றப்பட்ட ஒன்றாகும்.

2ஜி அலைக்கற்றை உரிமங்களை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை எதிர்த்து சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக ரஷ்யாவின் சீஸ்டெமா நிறுவனமும், நோர்வே நாட்டைச் சேர்ந்த டெலிநார் நிறுவனமும் அறிவித்துள்ளன.

இந்திய அரசிற்கு மேலான சூப்பர் அரசாங்கமாக ஏகாதிபத்திய நிறுவனங்கள் செற்பட்டு வருவதையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

1990-களில் புதிய தாராளவாதக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின், அதுகாறும் அரசின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருந்து வந்த துறைகள் சிலவற்றுள் இந்தியத் தரகு முதலாளிகளும் ஏகாதிபத்திய தொழில் கழகங்களும் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டன. இப்படி நுழைந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் அதிரடி இலாபம் அடைவதற்கு வசதியாக அத்துறையில இருந்துவரும் அரசு நிறுவனங்களின் செயற்பாடுகள் திட்டமிட்டே முடக்கப்பட்டன. அரசுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல்., நட்டத்தில் தள்ளப்பட்டதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

தனியார்மயத்தின் இரண்டாவது கட்டத்தில் பல நூறு கோடி ரூபாய் சொத்துக்களையும் இலாபத்தையும் கொண்டிருந்த பொதுத்துறை நிறுவனங்கள் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு விற்பனை செய்யும் படலம் ஆரம்பமானது.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் பொதுத்துறை நிறுவனங்களை விற்பனை செய்வதற்காகவே ஒரு துறையை ஏற்படுத்தி, அதற்குத் தரகு முதலாளிகளின் நம்பகமான விசுவாசியான அருண் ஷோரி அமைச்சராக்கப்பட்டார். இலாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை என்ன விலைக்கு விற்கலாம் என்பதைக்கூட நாடாளுமன்றத்திற்குப் பதிலாக ஏகாதிபத்தியவாதிகள்தான் முடிவு செய்தனர்.

2100 கோடி ரூபாய் மதிப்பு கொண்ட மாடர்ன் புட்ஸ் 104 கோடி ரூபாய்க்கும், 5,000 கோடி ரூபாய் மதிப்பு கொண்ட பால்கோ 551 கோடி ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டதிலிருந்தே இரண்டாவது கட்டத்தில் நடந்த பகற்கொள்ளையின் பரிணாமத்தைப் புரிந்து கொள்ளலாம்.... (தொடரும்)

-இணைப்பு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய- இலங்கை உறவுகளில் விரிசல் ஏற்படுத்த முடியாது

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டு

இந்திய -இலங்கை உறவுகளில் விரிசல் ஏற்படக் கூடிய வாய்ப்பு கிடையாது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா தெரிவித்துள்ளார்.

பல்வேறு ஏதுக்களின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் வலுவாகக் காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் திடீரென விரிசலை ஏற்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக வாக்களிப்பதன் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் முழு அளவில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

காணாமற் போதல்கள், கைதுகள், அதி உயர் பாதுகாப்பு வலயம் போன்ற பல்வேறு முக்கியமான பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய இலங்கைக்குள் அதிகார பகிர்வின் அடிப்படையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதற்கு அப்பாலான தீர்வுத் திட்டத்தின் மூலம் அர்த்த முள்ள அதிகாரப் பகிர்வினை வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தைகளின் மூலம் காத்திரமான தீர்வுத் திட்டங்களை எட்ட முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (2)



திருநெல்வேலி மத்தி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் மகளிர் விவகார குழு குழுவும் இணைந்து சர்வதேச மகளிர் தின விழாவை அண்மையில் கம்பன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்திய போது...

# போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட இருவர் கைது

போலி நாணயத் தாள்களை அச்சிட்டு விநியோகித்த, 18 மற்றும் 17 வயதான இருவர், சிலாபம் - முகுணுவடவன பகுதியில் வைத்து, மாதம்பை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் வசமிருந்து போலி நாணயத் தாள்களை அச்சிடப் பயன்படுத்தப்பட்ட கணனி, பிரிண்டர், ஸ்கானர் மற்றும் ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் சிலாபம் - முகுணுவடவன - கோன்கஸ்யாய பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் எனத் தெரியவந்துள்ளது.

இவரது வீட்டில் இருந்தே கணனி உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு அச்சிடப்பட்ட நாணயத் தாள்களை விநியோகிப்பவர் முகுணுவடவன - தெற்கு மஹகம பகுதியைச் சேர்ந்த 17 வயதான ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நம்மால் ஆயிரம் மற்றும் 2 ஆயிரம் ரூபா நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டதாகவும், அவற்றை புழக்கத்தில் விட இரவு வேளைகளில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிக்கு பெற்றோல் இடச் செல்வதாகவும் சந்தேகநபர் பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை குறித்து அயலவர்கள் தெரிந்து கொண்டதும், அச்சிடப்பட்ட நாணயத் தாள்களைத் தீயிட்டு கொளுத்தியதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் குறித்த சந்தேகநபர்களால் அச்சிட்டு, விநியோகிக்கப்பட்ட போலி நாணயத் தாள்களின் பெறுமதி பற்றி தெரியவரவில்லை. (2)

# அடுத்த வருடம் முதல் கல்வி முறையில் முற்றாக மாற்றம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

அடுத்த வருடம் முதல் இலங்கையில் கல்வி முறையில் முற்றாக மாற்றம் செய்யப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகள் என்பன மாற்றி அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் பாடப் புத்தகங்கள் மற்றும் பாடத் திட்டங்களும் மாற்றி அமைக்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இலங்கையில் திறந்த பொருளாதார கொள்கையை அமுலாக்கியதுடன், அது சார்ந்த கல்வி முறையையும் அமுலாக்கி இருந்தது.

லண்டன் கல்வி முறையின் அடிப்படையில் இலங்கையின் கல்வி முறையும் காணப்பட்டதால், இலங்கையில் கல்வியில் சிறந்த பெறுபேறுகளை பெற முடியவில்லை.

இதன் காரணமாகவே கடந்த காலங்களில் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தி போரிட்டனர்.

இந் நிலையில் தற்போது இந்த கல்வி முறைமையை முற்றாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

## கடவுளுக்கு மரியாதை

ஒருவர் வெளியூர் சென்று அழகான ஆண்டவன் சிலையொன்றை வாங்கிக் கொண்டு வந்தார்.

அவர் தனது வீட்டிற்கு முன்புறமாக ஒரு சிறிய கோயிலை அமைத்தார். அதனுள் அந்தச் சிலையை வைத்தார்.

தினமும் அதற்கு முன்னால் போய் நின்று வழிபடுவது அவரது வழக்கமாக இருந்தது.

நாட்கள் செல்ல அருகில் இருந்த அயலவர்கள் தினமும் அங்கே வந்து சாமி வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள்.

ஒருநாள் இவர் அந்தச் சிலையை எடுத்து சுத்தம் செய்யும்போது... அது தவறிக்கீழே விழுந்து விட்டது. விழுந்த சிலையின் கை உடைந்தும் விட்டது.

என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

சரி பரவாயில்லை என்று சொல்லிவிட்டு அந்தச் சிலையை தூக்கி ஒரு ஓரமாக போட்டு விட்டார்.

மீண்டும் அதே ஊருக்குப் போய் அதே உருவில் இன்னொரு சில்லையை வாங்கிக் கொண்டு வந்தார். அதை பழைய இடத்தில் வைத்தார். பழையபடி தினமும் சாமி கும்பிட ஆரம்பித்தார்.

கை உடைந்த சிலையை திரும்பிப் பார்ப்பதில்லை. இது ஒரு விதமான பக்தி.

இது மாதிரி பக்தர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி ஒன்று உள்ளது.

இது ஒரு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு நிகழ்வு.

ஒரு கோயில் அங்கே ஒரு அர்ச்சகர். அந்தக் கோயிலில் தினமும் ஒரு பழக்கம்.

இரவு வேளையிலே இறைவன் விக்கிரகத்தை எடுத்துப் படுக்கையிலேயே சயனிக்க வைக்கிறது.

ஒருநாள் இரவு அவர் விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு மெதுவாகப் போகும்போது கால் தவறி விழுந்துவிட்டார்.

அவருக்குக் காலில் எதுவுமே நடக்கவில்லை. ஆனால், மீண்டும் அந்தச் சிலையின் ஒரு கை உடைந்துவிட்டது.

அவர் பதறிப் போனார். மறுநாள் அங்கே இருந்தவர்கள் " சேதமடைந்த சிலையை வழிபடக்கூடாது. அதனால் வேறொரு சிலையை இங்கே வைத்து வழிபடலாம் " என்றார்கள்.

இருந்தாலும் அர்ச்சகர் சற்று யோசனை செய்து விட்டு அங்கே இருந்த சிறிய பாமரர் பட்டாச்சாரியாரிடம் சென்று ஒரு தடவை இது தொடர்பாக யோசனை கேட்டுக் கொண்டு வரலாம் என எண்ணினார்.

அவரிடம் போய் யோசனை கேட்டார்.

நடந்தவற்றை விபரமாக எடுத்துரைத்தார்.

இதைக்கேட்ட பெரியவர் சொன்னார்; "ஏன் ஐயா, உனது மருமகனுக்கு கை உடைந்து போனால் நீ என்ன செய்வாய்? உடனே அவரைத் தூக்கி கங்கையிலே வீசிவிடுவாயா? அப்படிச் செய்து விட்டு உன் பெண்ணுக்கு இன்னொரு திருமணம் செய்து விடுவாயா?என்றார்.

வந்தவர் தலையை சொறிந்தார்.

உன் சொந்த உறவினருக்கு எப்படி அன்பாக செய்வாயா அப்படித்தான் இறைவனுக்கும் செய்ய வேண்டும்.

"அப்படியென்றால்... ? "

"அந்தச் சிலையையே சரி செய்து வழிபடுவது தான் முறை "

அர்ச்சகர் தெளிவோடு திரும்பி ஆலயம் சென்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமடைந்துள்ள மருதடி பாலத்தினால் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன

(கிளிநொச்சி)

சிவநகர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள சிவன்சோலை கோணாவில் கிராமத்திற்கும் வயல் பகுதிகளுக்கும் செல்லும் மருதடி பாலம் சேதமடைந்துள்ளமையால் விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை வயல் வீதி திருத்தத்திற்காக சல்லிக் கற்களை ஏற்றிச் சென்ற லான்ட்மாஸ்டர் வாகனம் சேதமடைந்த பாலத்தினால் தடம்புரண்டு வாய்க்காலுக்குள் வீழ்ந்துள்ளது.

எனினும் சாரதி தெய்வாதீனமாக காப் பாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடமும் மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றும் இடம்பெற்றது.

அவ்வேளை மழை பெய்து கொண்டிருந் தமையால் வாய்க்காலுக்குள் வீழ்ந்த மோட் டார் சைக்கிள் வெள்ளத்தோடு இழுத்துச் செல் லப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாலம் புனரமைக்கப்படாமை யினால் போக்குவரத்துச் செய்பவர்கள் இவ் வாறான விபத்துக்களுடன் பல்வேறு இடை



யூறுகளையும் எதிர்நோக்கி வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, ஆபத்தான நிலையிலுள்ள குறித்த பாலத்தை புனரமைக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(9-254)

## அரச ஓய்வூதியர்களின் விபரங்கள் திரட்டல்

(பூநகரி)

இலங்கை முழுவதிலும் உள்ள அரச ஓய் வூதியர்கள் தொடர்பான தகவல்களை திரட் டுவதற்காக ஓய்வூதியர் திணைக்களத்தினரால் இம் மாதம் முதல் கணக்கெடுப்பு ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இதன்படி ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள அரச ஓய்வூதியர் சங்கங்கள் மூலம் விபரங்கள் திரட்டப்படுவதற்காக ஒவ் வொரு கிராம சேவையாளர் பிரிவிற்கும் ஒவ் வொரு சிரேஷ்ட ஓய்வூதியர் நியமிக்கப்பட்டு விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இக் கணக்கெடுப்பின் ஊடாக அரச ஓய் வூதியர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

பிரதேச பிரிவுகளிலுள்ள அனைத்து ஓய்வூதியர் சங்கங்களும் ஓய்வூதியத் திணைக்களத்தினர்ல அறிவுறுத்தப்படும் விபரங்களை செயலாளர், தேசிய சம்பள ஆணைக்குழு, பண்டாரநாயக்கா ஞாப கார்த்த மண்டபம், பௌத்தலோக மாவத்தை, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9-84)

## முல்லையில் பின்தங்கிய கிராமங்களை இலக்கு வைக்கும் ஏமாற்றுக்காரர்கள்

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களின் மக்களைஇலக்கு வைத்து ஏமாற்று வியாபாரம், மதமாற்றம், குத்தகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகள்அதிகரித்துள்ளன.

இடப்பெயர்வின் பின் பல்வேறு இடர் பாடுகளுடன் வாழ்ந்து வரும் இம் மக்களை இலக்கு வைத்தே இவ்வாறு பலரும் ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தரக்குறைவான பொருட் களை சந்தைப்படுத்துபவர்களும், மத மாற் றம் செய்கின்ற குழுக்களும், லீசிங் (குத் தகை) என்ற போர்வையில் வாகனங்களை ஏமாற்றி வழங்கிவிட்டு பின் கட்டுப்பணம் செலுத்த வில்லையென கூறிவாகனங்களை பறித்துச் செல்லும் நிறுவனங்களின் நட வடிக்கைகளும் அதிகரித்துக் காணப்படு கின்றன.

அத்தோடு வறிய குடும்பங்களிற்கு சென்று மதபோதனையில் ஈடுபடுபவர்கள் தமது மதத்திற்கு மாறினால் தங்களின் மதத்தினர் ஊடாக உதவிகளை வழங்குவதாகக் கூறி மதமாற்றத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவற்றை நம்பி மல்லாவி,பாண்டியன் குளம், பாலிநகர், அனிஞ்சியன் குளம், மாங் குளம் போன்ற கிராமங்களில் வசிக்கும் இந்து மதக் குடும்பங்கள் சில மதம் மாறியுள்ளன.

எனினும் இவர்களுக்கு எவ்வித உதவி களும் வழங்கப்பட வில்லை.

லீசிங்கினூடாக முல்லை. மாவட்டத்தில் மட்டும் வழங்கப்பட்ட 35 பேருந்துகள், 16 முச்சக்கர வண்டிகள், 22 டிப்பர் ஊர்திகள், 86 உழவு இயந்திரங்கள் உட்பட ஏனைய ரக வாகனங்கள் 190 இற்கும் மேல் கட்டுப் பணம் செலுத்தவில்லையென காரணம் காட்டி அந் நிறுவனங்கள் அவற்றை மீளப் பெற்றுள்ளன.

இதனால் தமது கையிருப்பு பணத்துடன் கடன் வாங்கி, ஊர்திகளை கொள்வனவு செய் தவர்கள் பலர் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

அத்தோடு தரக் குறைவான இலத்திரனி யல்,பிளாஸ்ரிக் போன்ற உற்பத்தி பொருட் களையும் வீடு வீடாக கொண்டு வந்து வியா பாரம் செய்பவர்கள் அதிக விலைக்கு விற் பனை செய்து வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (9-15)

## வவு.வில் முகமறுசீரமைப்பு சத்திரசிகிச்சை ஆரம்பம்

(குருமன்காடு)

வட பகுதியில் முக சீரமைப்பு சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டிய வர்கள், அதனை வவுனியா வைத்திய சாலையில் பெறமுடியும் என வவுனியா பொது வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் மல்லவராச்சி தெரிவித்தார்.

வட பகுதியில் உள்ள முக சீரமைப்பு மற்றும் உதடு அண்ணப்பிளவு தாக்கத்திற்கு உட்பட்டவர்கள் இதுவரை காலமும் அனு ராதபுரம் அல்லது தென் பகுதி வைத்திய சாலைகளுக்கு சென்றே சிகிச்சைகளை பெற்று வந்தனர்.

இதன் காரணமாக பொது மக்கள் மொழி பிரச்சினைகள் மற்றும் நேரம், பண பிரச்சின்ன களையும் எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த நிலையில் வட பகுதி மக்களுக்கு அண்ணபிளவு, உதடு மற்றும் முகசீரமைப்பு சத்திர சிகிச்சையை இலகுவாக வழங்க வேண்டிய தேவையின் பொருட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் இச் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வட பகுதியில் இத் தாக்கத்திற்கு உள்ளானவர்கள் இலகுவாக தமக்கான சத்திர சிகிச்சைகளை மேற் கொள்ள முடியும்.

அத்தோடு இச் சிகிச்சைகளை பெற விரும்புபவர்கள் குறிப்பிட்ட வயதிற்குள் இச் சிகிச்சைகளை பெற வேண்டியவர்களாக உள்ளமையினால் இவ்வாறான குறைபாட்டு டன் பிறக்கும் குழந்தைகளை 5 வயதிற்குள் வைத்தியசாலைக்கு அழைத்து வந்து சிகிச்சைகளை பெறவேண்டும் எனவும் வைத்திய கலாநிதி மல்லவராச்சி அறிவுறுத் தியுள்ளார்.(9-250)




## அங்குரார்ப்பண நிகழ்வு

(கிளிநொச்சி)

செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு இல்ல (ஆண்கள்) அங்குரார்ப்பண நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இல 5/2, திருவையாறு, கிளிநொச்சி எனும் முகவரியில் அமைந்துள்ள குறித்த இவ் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, கௌரவ விருந் தினர்களாக கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ரணசிங்க யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)







சித்திரை புத்தாண்டு விழா கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கலை நிகழ்வு இடம்பெறு வதையும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி நிகழ்வில் பங்கு பற்றியவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதலில் 60 பேர் பலி!



மத்திய ஆபிரிக்க நாடுகளில இஸ்லாமிய சடட திட்டங்களுக்கு உடபட ஆட்சியை அமைக்க வேண்டுமென போக்கோ ஹறாம் என்ற தீவிரவாத அமைப்பு ஆயுத மேந்திய போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறது.

நைஜீரியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை தாக்கி அழிக்கும் போக்கோ ஹறம் தீவிரவாதிகள் அப்பாவி பொதுமக்களையும் ஈவிரக்கமினறி கொன்று குவித்து வருகின்றனர்.

இந் நிலையில், நைஜீரியா நாட்டின் வடகிழக்கு மாநிலமான போர்னோவில உள்ள அம்ச்சக்கா மற்றும் சுற்றுப்புற கிராாங்களுக்குள் நேற்று கும்பலாக புகுந்த போகோ ஹறம் தீவிரவாதிகள், அங்கிருந்த வீடுகளின் மீது சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை வீசி ஆவேச தாக்குதல் நடத்தினர்.

உயிர் பயத்தில் வீடுகளுக்குள் இருந்து வீதிக்கு ஓடி வந்த அப்பாவி மக்களின் மீது அந்த கொடியவர்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கிகளால் சுட்டதில் 60இற்கும் மேற்பட்ட கிராமத்தினர் பலியாகினர். அம்ச்சக்கா கிராம மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வந்த ஒரு ஆழ்துளை கிணற்றையும் அவர்கள் வெறித்தனமாக அழித்து, சேதப்படுத்திவிட்டு தப்பிச்சென்றனர்.

# ஐ.நா.விசாரணைக்குழுவிடம் சாட்சியமளிப்பவர்கள் தண்டிக்கப்படுவர் அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

சர்வதேச பொலிஸ்காரனாக அமெரிக்கா செயற்படுவதை இலங்கை அனுமதிக்காது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வந்த யோசனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர், ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு ஒன்று இலங்கைக்கு சென்று விசாரணைகளை. நடத்த எதிர்பார்த்துள்ளது.

எனினும் இந்த நிபுணர் குழுவின் நியமனம் இலங்கையின் இறைமைக்கு எதிரான ஒன்று. அத்துடன் இலங்கையின் கொள்கைக்கு அது முரணானது.

எனவே, எந்தவொரு ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவுக்கும் இலங்கை அனுமதி தராது.

அத்துடன் அதன் செயற்பாடுகள் குறித்தும் அவதானமாக செயற்படும். இந்த விசாரணைக் குழுவின் முன்னால் சாட்சியங்கள் கூறுவது இலங்கையை பொறுத்தவரையில் குற்றமாகும்.

எனவே, குறித்த குழுவிடம் சாட்சியமளிக்கும் இலங்கையர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவர் என்று அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார்.

இந் நிலையில் நாடுகள் இலங்கை மீது பொருளாதாரத் தடையை ஏற்படுத்துமானால் அதனை நீதியின் முன் வெற்றி கொள்ள இலங்கை தயாராகவுள்ளதாகவும் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார். (2)

# க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

க.பொ.த (சா/த) பரீட்சை -2013 பெறு பேறுகள் பரீட்சை திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரீட் சையில் முன்னணி பெறு பேறுகளைப் பெற்றவர்களின் பெயர் விபரங்களை பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். அதன் விபரம் வருமாறு,

**யா/ புற்றளை மகா வித்தியாலயம்**

ந. தினேஸ்-6ஏ2பிசி, க.பிரகாசினி-4ஏ2பிசி2எஸ், ம.நூர்ஜிதா- 4ஏ 2பி2சிஎஸ்.

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி பொனிபஸ் சாந்தலூசியா தவமணி

இளவாலை போயிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா Mississauga ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொனிபஸ் சாந்த லூசியா தவமணி ( முன்னாள் ஆசிரியர்) கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமைஅன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு Saviour of the World Chinese Catholic Church, 30 Bristol Rd W, Mississauga, ON L5R 3K3,Canada என்னும் முகவரி யில் ஒப்புக்கொடுக்கப்பட்டுபின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி கனகரத்தினம் கிருஷ்ணலீலா தெபோரா

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Bad Friedrichshall ஐவசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் கிருஷ்ணலீலா தெபோரா கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு Bergfriedhof, Neuenstadter StraBe 74177, Bad Friedrichshall,Germany என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.



### லதா விஸ்வலிங்கம்

அராலி வடக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட லதா விஸ்வலிங்கம் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக் கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்



### திருமதி கனகரத்தினம் கமலாம்பிகை

மல்லாகத்தைப்பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் கமலாம்பிகை கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை புதன்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் தகனம் செய்யப்படும்



### திருமதி குணபாலன் ஸ்ரெல்லா சரஸ்வதி

கொக்குவில்கிழக்கு பொற்பதி வீதியைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட குணபாலன் ஸ்ரெல்லா சரஸ்வதி கடந்த12 ஆம் திகதி சனிக்கிழமைஅன்றுகாலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நாளை புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### மயில்வாகனம் மகேந்திரன்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் இரத்மலானையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகேந்திரன் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி மருதையினார் யோகம்மா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மருதையினார் யோகம்மா கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமைஅன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வட்டக்கச்சி மம்மில் மயானத்தில் தகனம் செய்யப்படும்



### மிக்கேல்பிள்ளை கிறிஸ்தோபர்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் மன்னார் முருங்கனை வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேல்பிள்ளை கிறிஸ்தோபர் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமா னார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10 மணிக்கு முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் செம்மந்தீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.




### கிறிஸ்ரி முருகையா

கந்தரோடையைப் பிறப்பிடமா கவும் கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரி முருகையா (முன்னாள் ஆசிரியர்) கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமைஅன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று காலை 9.30 மணிக்கு Aeterna Complexe Funeraire-Funeral Complexe, 55, Rue Gince, Saint-Laurent, QC H4N 1J7 Canada என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்படும்.

# மெக்சிகோ வாகன விபத்தில் 25 பேர் உயிரிழப்பு; 4 பேர் காயம்





மெக்சிகோவில் இடம்பெற்ற விபத்தில் 25 பேர் பலி.நான்கு பேர்காயமடைந்துள்ளதாக அதிகாரிகள தெரிவித்துள்ளனா.

மெக்சிகோ நாட்டின் டபஸ்கோ மாநிலத்தின் வில்லா ஹெர்மோசா நகரத்திலிருந்து மெக்சிகோ நகருக்கு பயணிகள பேருந்து ஒன்று நேற்று முன்தினம் புறப்பட்டது. இந்தப்பேருந்து சென்று கொண்டிருந்த நெடுஞ்சாலையில் 135 கி.மீ. தொலைவில் ஒரு டிரைலர் டிரக் நிறுத்தப்பட்டிருந்தது. வேகமாக சென்று கொண்டிருந்த இந்தபேருந்தின்சாரதி நின்று கொண்டிருந்த டிரக்கைக் கவனிக்காமல் அதன் பின்னால் மோதியதில் பேருந்து தீப்பிடித்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 25 பேர் பலியானதாகவும் நான்கு பேர் காயமடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். தீப்பிடித்த பேருந்து முற்றிலும் கருகி உருக்குலைந்துள்ளதால் இறந்த பயணிகளை அடையாளம் காண முடியவில்லை என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். இறந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகக் கூட இருக்கலாம். ஆனால் தீயினால் பேருந்து முற்றிலும் சேதமடைந்ததில் உடல்கள் அடையாளம்காணப்பட முடியவில்லை என்று வெராகுரூஸ் நகர கவர்னர் ஜவியர் டுவார்டே தெரிவித்துள்ளார்.

றோமன் கத்தோலிக்கப் பெரும்பான்மையினரைக் கொண்ட இந்த நாட்டில் புனித வாரக் கொண்டாட்டத்தின் ஆரம்ப தருணத்தில் நடைபெற்ற இந்த விபத்து அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# புலி ஆதரவு அமைப்புக்களின் வங்கி கணக்குகளை முடக்குமாறு கோரிக்கை

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்களின்வங்கி கணக்குகளை முடக்குமாறுசில நாடுகளிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான 15 அமைப்புக்களினால 15 நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட வேண்டுமென இலங்கை அரசாங்கம் அந்தந்த நாடுகளிடம் கோரியுள்ளது.

1373ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் அடிப்படையில் புலி ஆதரவு அமைப்புக்கள்தடை செய்யப்பட்டுள்ளன.

உலகத் தமிழர் பேரவை மற்றும் பிரித்தானிய தமிழர் பேரவை ஆகியன மட்டும் பிரிட்டனில் எட்டு பரதான வங்கிகளில் கணக்குகளை பேணி வருகின்றன.

புலிகளின் சுவிஸ் வலையமைப்பு இரண்டு சுவிஸ் வங்கிகளில் கணக்குகளை பேணி வருகின்றன.

தடைகளை நீக்குவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் முயற்சித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தடையை இலங்கை அரசாங்கமே நீக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப்பேரவையின்ஆணையாளர் நவநதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

தடை காரணமாக எதிர் வரும் காலங்களில் நடைபெறும் மனிதவுரிமைப்பேரவை மாநாட்டில் குறித்த அமைப்பின் பிரதிநிதிகளினால் பங்கேற்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை ஒடுக்க நினைப்பவர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படட்டும்



ஜய வருடம் நாம் அனுபவித்து வருகின்ற துயர்கள் அனைத்திற்கும் விடை தரும் ஆண்டாக அமையட்டும். காணாமல் போகச்செய்யப்பட்டோர் தொடர்பாக நல்ல செய்தியைக் கொண்டு வருவதாகவும், வெறுமனே சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகவும், பலதசாப்தங்களாக நீடித்து வருகின்ற எமது உரிமைப்போருக்கான நல்லதொரு அரசியல் தீர்வைக் கொண்டு வருவ தாகவும், இலங்கை மண்ணில் தமிழ்ச் சமூகமும் சமபங்காளிகள் என்பதை உலகம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும், இந்த மண்ணில் ஒவ்வொரு மனிதனும் சுயமரியாதையுடன் வாழ்வதற்கு உரித்துடையவன் என்பதைப் பறைசாற்றுவதாகவும் அமையட்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எம்மை அடக்கியாள நினைப்பவர்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட்டு, உண்மையான ஜனநாயகத்தையும், மனிதநேயத்தையும், நல்லிணக்கத்தையும், அமைதியையும் கொண்டுவரவேண்டும் என்று வேண்டுகின்றோம்.

புத்தாண்டிலிருந்தாவது தமிழ் மக்களும், இம்மண்ணின் அனைத்து தமிழ் அரசியல் தலைமைகளும் ஐக்கியப்பட்டு ஒருபொது வேலைத்திட்டத்தின்கீழ் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்குத் திடசங்கல்பம் ஏற்போம்.

தனிநபர் வழிபாட்டையும் துதிப்பாடல்களையும் ஒழித்து கூடி உழைத்து எமது இலக்கை அடைவதற்கு ஒவ்வொருவரும், இதயசுத்தியுடன் பாடுபடுவோம் என்று புத்தாண்டில் சபதமேற்போம்.

எம்முடன் புத்தாண்டைப் பகிர்ந்துகொள்ளும் சிங்கள சகோதரர்களும் எமது உரிமைப்போராட்டத்தின் நியாயங்களைப் புரிந்துகொண்டு, எமக்காகக் குரல்கொடுப்பதற்கும் எம்முடன் இணைந்து எமது விடுதலைக்காக உழைப்பதற்கும் முன்வரவேண்டும் என்று புத்தாண்டு தினத்தில் வேண்டுகோள் விடுப்பதுடன் அவர்களுக்கும் எமது உளமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழர்களின் விழிவுக்காக ஒன்றிணைவோம்!



தமிழ் பேசும் மக்களாகிய நாம் கடந்த பல ஆண்டுகளாக துன்பங்கள் துயர ங்களுக்குள்ளே வாழ்ந்து வருகின்றோம்.எமது இந்த துன்ப துயரங்கள் அனை த்தும் அகல வேண்டுமென்றால் நாம் இன மத சாதி பேதமின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது புத்தாண்டு வாழ்த்துச். செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்திருக்கும் புத்தாண்டு செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த காலங்களிலே தமிழ் பேசும் மக்களாகிய எம்மை பிரித்தாளும் கைங்கரிய முறையை பயன்படுத்தி சிறுபான்மை இனமாக்கி அடக்கி ஆண்டுகொண்டிருப்பவர்கள் தற்போது எமக்குள்ளே மத வேறுபாட்டினையும் அதனோடு தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இவ்வாறானசந்தர்ப்பங்களில் எமது மக்கள் ஒற்றுமையையும் புத்தி சாதுரியத்தையும் பல தடவைகளில வெளிக்காட்டியுள்ளனர். இதனால் எமது மக்களின் ஒற்றுமையை எவராலும் சீர்குலைக்க முடியாது.

உங்கள் பணத்தை அதிக வெடி கொளுத்தி கரியாக்காமல் ஒரு வேளை உணவுக்கு கூடவழியற்றிருக்கும் ஒரு சில எம் உறவுகளுக்கு மன மகிழ்வோடு கொடுத்து பிறந்துள்ள புத்தாண்டை அர்த்தமுள்ளதாக கொண்டாடுங்கள். அத்தோடு தமிழ் பேசும் மக்கள் வெகு விரைவிலே சுதந்திரக் காற்றை சுவாசிக்க சகல தரப்பனரும்ஒத்துழைக்கவேண்டும். எனவே இதற்காக சகலரும் விசேட பிரார்த்தனைகளை மேற்கொளளுமாறு அன்பாககேட்டுக்கொள்வதோடு எனது உறவுகளுக்கு மீண்டும் எனது இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார்.

# கண்ணுதலான் கருணையினால் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கட்டும்



சுப நேரத்தில் பிறந்திருக்கும் தமிழ், சிங்கள ஜய வருடம் எல்லோருக்கும் எல்லா வளங்களையும் பெற்றுத்தர வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன் என யாழ்.மாநகர சபை முதல்வர் யோ.பற்குணராசா தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையர்கள் என்ற ரீதியில் அரசியல் பேதங்களை மறந்து நிரந்தர சமாதானம் மலர்ந்த இவ்வேளையில் சமாதான நிலையினை குழப்பும் சக்திகளுக்கு எதிராக மலரும் புத்தாண்டு அமைய வேண்டும்.

தமிழ் மக்கள், சிங்கள மக்கள் தங்களுடைய கடந்த கால வரலாறுகளை மறந்து பரஸ்பரம் புரிந்துணர்வுடன் உறவாடும் இவ்வேளையில் மக்கள் யாவரும் இலங்கையர் என்ற ரீதியில் ஒவ்வொரு பிரதேசங்களுக்குச் சென்று தத்தம் பிரதேசம் சென்று நிம்மதியாக புதுவருடம் கொண்டாடுவது மிக சிறப்பான அம்சமாகும்.

இப்புத்தாண்டு எல்லோருக்கும் ஒளிமயமான எதிர்காலத்தை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையுடன் மனதார வாழ்த்துகின்றேன் என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார்.

# அனைத்து இன மக்களும் ஒற்றுமையாய் வாழ்வோம்



பிறந்திருக்கும் ஜய வருடம் அனைவருக்கும் சாந்தி, சமாதானத்தை கொடுப்பதுடன் இன மத பேதமின்றி அந்நியோன்னியமாய் வாழ வழி சமைக்க நாம் அனைவரும் இறைவனை வேண்டுவோமாக என வேலணை பிரதேச சபை தவிசாளர் சிவராசா போல் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நீண்ட கால யுத்த சூழலுக்குள் சிக்கி தமது உயிர், உடைமைகளை இழந்து நின்ற மக்களிற்கு இந்த ஜய வருடம் நிறைவாய் அமையும். இலங்கை திருநாட்டில் வாழும் அனைத்து இனமக்களும் தமது பேதங்களை மறந்து ஒற்றுமையாய் வாழ்வதனூடே எமது நாட் டையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

பிறக்கும் இவ் வருடம் நம் அனைவருக்கும் இனிதாய் அமைவதுடன் எமது கஷ்ட துன்பங்கள் அனைத்தும் விலகி வெற்றியை பெற்றுத் தரும் ஆண்டாகவே அமையும். அந்த நம்பிக்கையுடன் நாம் ஒவ்வொருவரும் எங்களுடைய கடமைகளைச்ள செய்வோம்.

# வேறுபாடுகளை மறந்து செயற்படுவோம்

### யாழ்.இந்து சமயப் பேரவை வாழ்த்து

இந்நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அமைதி தொடர்ந்து நீடித்து நிலைப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் வேறுபாடுகளை மறந்து செயற்பட ஜய எனும் நாமம் தாங்கிவரும் இப்புது வருடத்தில் திடசங்கற்பம் பூணுவோமாக! என யாழ் இந்து சமயப்பேரவையின் செயலாளர் சக்திகிரீவன் தனது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன முரண்பாட்டால் சிதறுண்டுள்ள தமிழர்களும் சிங்களவர்களும் இன்றைய புத் தாண்டை இணைந்து கொண்டாடு வதன் மூலம் எமக்குள்ள நீண்ட கலாசாரப் பண்பாட்டுத் தொடர்பை இறுகப் பற்றி வளர்த்துக்கொள்வதற்கு உறுதுணையாகட்டும்.

இப்புனித நாளில் ஒருவருக்கொருவர் செய்த தவறுகளை எண்ணி பொழுதுபோக்குவதை விட்டு, மனு நீதியோடு நடந்துகொள்வதற்கும், பிறர்க்கேற்படும் துன்பங்கண்டு தமக்கேற் படும் துன்பம் என எண்ணி பதைபதைக்கும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்வதற்கும் திட சங்கற்பம் பூணுவோமாக! என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார்.

# டெங்கிற்கு ஊதுவோமா சங்கு?

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அதிகமாக நுளம்பு பெருகும் இடங்கள் எவை? இவ்வாறு எட்டு வகையான இடங்களை இனங் காட்ட லாம். அவை யாவன,

**1.இலகுவில் உக்காத கழிவுப் பொருட்கள்**

- ❖ சொப்பிங்பை, பொலித்தீன் பை, பொலித்தீன் துண்டுகள், பிளாஸ்ரிக் பொருட்கள், பிளாஸ்ரிக் கோப்பை, மெழுகுச்சீலை, விளையாட்டுப் பொருட்துண்டுகள்.
- ❖ பீங்கான் கோப்பைத்துண்டுகள், தயிர்ச்சட்டி, வெற்று மீன்ரின் போத்தல், முட்டைக்கோது
- ❖ ரயர், றெஜிபோம் பொருட்கள், மரப்பெட்டி, நத்தையோடு, சங்கு

**2.தாமதாக உக்கும் கழிவுப்பொருட்கள்**

- ❖ சிரட்டைகள்
- ❖ இளநீர்க் கோம்பை
- ❖ விளாம்பழக்கோது

**3.மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்கள்**

- ❖ அடைக்கப்பட்ட மழைநீர்ப்பீலி
- ❖ அடைக்கப்பட்டசீமெந்துக்கான்
- ❖ நீர்தேங்கக்கூடிய அழுத்தமற்ற, கொங்கிறீட் கூரை

**4.மூடப்படாத நீர் தேங்கி வைக்கப்படும் இடங்கள்**

- ❖ நீர்த்தாங்கி,சீமெந்து,நீர்த்தொட்டி
- ❖ கிடாரம், சட்டி முட்டிகள்
- ❖ தகரஉருளைபரல்கள்,வாளிகள்
- ❖ பிளாஸ்ரிக் பீப்பாய், பிளாஸ்ரிக் நீர்க்கான்

**5.சுற்றாடலை அலங்கரிக் கும் அழகுப்பொருட்கள்**

- ❖ பூச்சாடிகளும் அவற்றின் கீழ் வைக்கப்படும் தட்டுகளும்
- ❖ மீன் இல்லாத நீர்த்தொட்டிகள்
- ❖ நீர் தங்கக்கூடிய சிலை வடிவங்கள்
- ❖ பறவைகள் நீராடும் தடாகங்கள்/குட்டைகள்

**6.வீட்டு உபகரணங்கள்**

- ❖ குளிரூட்டியிலுள்ளநீர்தேங்கித்தட்டு
- ❖ அரைகுளிராக்கியிலுள்ள நீர் தேங்கித்தட்டு




**7.வீட்டினுள்ளும் வெளியிலுமுள்ள நீர்தங்கு சிறு பாத்திரங்கள்**

- ❖ மேசைக்கால் எறும்பு நீர்த்தட்டு
- ❖ செல்லப்பிராணிகளின் உணவு, நீர்த்தட்டுக்கள்

**8. வீட்டினுள்ளும் வெளியிலுமுள்ள தாவரங்கள்**

- ❖ பெரிய இலைகளையுடைய, நீர் தேங்கவல்லஅழகுத்தாவரங்கள்
- ❖ மரப்பொந்துகள்
- ❖ நீர் தேங்கியிருக்கும் வகையில் வெட்டிய மர அடிக்கட்டைகள்
- ❖ கமுகம் ஓலை மட்டைகள்

மேற்சொன்ன 8 இடங்களையும் நாம் இலகுவில் இனங்கண்டு அழித்தோ அன்றி அகற்றியோ வருவோமானால் டெங்கு எமக்கு ஒரு சவால் அல்ல. அதற்கு இலகுவாக ஊதிடலாமே சங்கு.

அவ்வாறு இல்லாது டெங்கு பரம்பும் நுளம்பின் சுறுசுறுப்புக்கு நாம் ஈடுகொடுக்கமுடியாது. மேம்போக்காகிச் செயற்படுவோமானால் நாம் பெரும் மனித மணித்தியால இழப்புக்களையும் [illegible] உயிரிழப்புக்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

**டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் யாவை?**

- ❖ உயர் காய்ச்சல்
- ❖ வாந்தி
- ❖ தலைவலி
- ❖ உடல், மூட்டுவலி
- ❖ இரத்தப்போக்கு (தோல், முரசு, சமிபாட்டுத்தொகுதி அறிகுறிகள் தோன்றுதல்

**உங்களுக்கு இவ்வாறான அறிகுறிகள் ஏற்படின் நீங்கள் செய்ய வேண்டியவை எவை?**

- ❖ டெங்கு நோய்க்கான சாத்திய நிலையை சந்தேகித்தல்
- ❖ அவ்வாறு அறிகுறிஏற்பட்டபிள்ளையை பாடசாலைக்கு அனுப்பக் கூடாது. அத்துடன் அதிக உடல் சக்தி இழக்கக்கூடியவேலைகளைதவிர்த்தல்
- ❖ காய்ச்சல் குணமடையும் வரை நுளம்பு வலையின் கீழ் பூரண ஓய்வு எடுத்தல்
- ❖ திரவ உணவுகளை (பழச்சாறு, ஜீவனி, அரிசிக்கஞ்சி) போதியளவு வழங்குதல்
- ❖ அஸ்பிரின் மாத்திரைகள் பாவிப்பதை தவிர்த்தல்
- ❖ காய்ச்சலைக் கட்டுப்படுத்த பரசிட்டமோலை சரியான அளவில் பாவித்தல்
- ❖ இரண்டு நாட்களுக்கு மேல் தொடர் காய்ச்சல் இருப்பின் தேர்ச்சி பெற்ற வைத்தியரை அணுகுதல்



டெங்கிலிருந்து உங்களைப்பாதுகாத்துக்கொள்ள ஏப்ரல் 2 முதல் 8 வரை டெங்கு வாரம் தயாராக உள்ளது. அந்த வாரத்தை அர்த்தபுஷ்டியுள்ளதாக மாற்றித்தர நீங்கள் தயாரா? (முற்றும்)

Dr.P.ஜெசிதரன்
சுகாதார வைத்திய அதிகாரி,
யாழ்.மாநகரசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு ஆண்டும் ஒரு தீயபழக்கத்தை வேரோடு களைந்து விடுங்கள்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கிலிட்டு நகையும் பழைய ஹெல்மெட்டுமே எங்கள் தலைவிதியாகிப் போயிற்று

ஜயவருடப் பிறப்பின் பலன் என்ன சொல்கிறது என்பது பற்றி சோதிடர்கள் பலரும் பலவாறாகத் தத்தம் கருத்துக்களை சோதிட அறிவியலுக்கு எட்டியவாறு கூறியுள்ளனர்.

27 நட்சத்திரங்கள் உள்ளடங்கிய 12 இராசிகளின் அடிப்படையில் புத்தாண்டின் சோதிடக் கணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளதாயினும் எங்களுக்கான பொதுப்பலன் என்பது புத்தாண்டிலோ, கிரக மாற்றங்களிலோ மாறுவதில்லை என்றுதான் கூறவேண்டும்.

சுருங்கக்கூறின் புத்தாண்டுப் பலன் வேறு. எங்கள் தலைவிதி வேறு.

நேற்றைய தினம் நல்லூர்க் கந்தனை வழிபடச் சென்றவேளை ஒரு பாவப்பிறவி நம் தலைக் கவசத்தை எடுத்துச் சென்று விட்டது.

ஜயம் என்றால் வெற்றி என்பது பொருள். இப்போது புத்தாண்டின் பிறப்பில் யாருக்கு வெற்றி என்று நோக்கினால், தலைக்கவசத்தை எடுத்தவருக்கே வெற்றி. அப்படியானால் நமக்குத் தோல்வி என்று பொருள் கொள்ள வேண்டும்.

ஆக, சட்டத்தை மதித்து தலைக்கவசம் அணிந்து சென்ற நமக்கு முடிவு இழப்பும் தோல்வியுமாயிற்று.

அதேநேரம் இன்னுமொருவரின் பொருளை அபகரிப்பதான தண்டனைக்குரிய குற்றச் செயலைச் செய்தவருக்கு முடிவு வெற்றியாகிப் போனது.

இதில் இருந்து பிறந்துள்ள ஜயவருடம் யாருக்கு வெற்றியைக் கொடுகிறது என்பது புலனாகும்.

இங்கு பிறந்த புத்தாண்டை குறை கூறுவது நம் நோக்கமல்ல. மாறாக, சட்டங்களை அமுல்படுத்தும்போது அதனை எல்லா நிலைகளிலும் அமுல்படுத்தவேண்டும். அப்போதுதான் சட்டத்தினால் நன்மை கிடைக்கும்.

ஆனால் எங்கள் நாட்டில் சட்டஅமுலாக்கம் என்பதில் நிறையவே ஏற்றத்தாழ்வுகள் உண்டு.

அதாவது தலைக்கவசம் அணியாமல் செல்லும் ஒருவரை பொலிஸார் இடைமறித்து அவர் மீது போக்குவரத்துச் சட்டத்தை மீறியது தொடர்பான குற்றத்தைப் பதிவு செய்கிறார். அதற்கான தண்டப்பணமும் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

சில வேளைகளில் தண்டப்பணம் அந்த இடத்திலேயே கைமாற்றப்பட்டு, சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியவர்கள் குற்றம் இழைக்கின்ற சம்பவங்களும் நடப்பதுண்டு.

நிலைமை இவ்வாறாக இருக்கும் போது களவு, கொள்ளை, திருட்டு, அபகரிப்பு, அத்து மீறல் என்ற சட்டவிரோதச் செயல்கள் இடம்பெறுகையில், அதுதொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்தல் அல்லது களவு எடுத்தவர்களைக் கைது செய்தல் என்ற விடயங்கள் மிக மந்தமாக இருக்கின்றன.

இதன் காரணமாக சட்டத்தை மீறுகின்றவர்கள், திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகின்றவர்கள் எவ்வித அச்சமும் இல்லாமல் தங்கள் வேலைகளை கனகச்சிதமாகச் செய்து, அதில் வெற்றியும் பெறுகின்றனர்.

இங்குதான் சட்டத்தைக் கடைப்பிடிப்போர் பல்வேறு இடைஞ்சல்களைச் சந்திக்க நேரிடுகிறது.

உண்மையில் சட்டத்தைக் கடைப்பிடிப்பவர்கள் நிம்மதியாக-திருப்தியாக- புறத்தாக்கங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியதில்லை என்ற பாதுகாப்பான சூழ்நிலையில் வாழவேண்டும்.

என்ன செய்வது? எங்கள் நாட்டில் சட்டம் ஒழுங்காகப் பாதுகாக்கப்படாததன் காரணமாக சட்டத்தைக் கடைப்பிடிக்கின்றவர்கள் பாதிக்கப்படும் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று வடபுலத்தை எடுத்துக்கொண்டால், இலட்சக்கணக்கான ரூபாய்களில் தங்க நகைகளை வாங்கி வைத்திருப்போர், திருட்டுக் கொடுமையால் அவற்றை மறைத்து வைத்துவிட்டு கிலிட்டு நகைகளை அணியும் பரிதாப நிலையில் உள்ளனர்.

கழுத்தில் மின்ன வேண்டிய தங்க நகைகள் மண்ணில் புதைக்கப்பட்டும் வங்கிப் பெட்டிகளில் பூட்டப்பட்டும் உள்ள நிலைமை எங்கள் தலைவிதியைக் காட்டுகிறதல்லவா?

இதுபோல இனிமேல் பழைய-பழுதடைந்த தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிய வேண்டியதும் எங்கள் தலைவிதி என்றாயிற்று. அப்போதுதான் தலைக்கவசம் வைத்தஇடத்தில் பாதுகாப்பாக இருக்கும்.

# பயங்கரவாத சட்டத்தின் கீழ் அதிகளவான பெண்கள் கைது

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் கைது செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2009-ம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், அண்மைய வாரங்களாக அதிகளவான பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலி தலைவர்களில் ஒருவராக அடையாளப்படுத்தப்பட்ட கோபி என்பவருடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே பல பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோபி மற்றும் அவரது சகாக்கள் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளனர்.

எனினும், இவர்களுடன் தொடர்புகளைப் பேணியதாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் பூசா உள்ளிட்ட தடுப்பு முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் சாதாரண கைதிகளுக்கு நிகரான வகையில் நடத்தப்பட வேண்டுமென பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பெண்கள் மற்றும் பதின்ம வயது சிறுமிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும் அல்லது கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பெண் கைதிகள் தடுத்து வைத்தல் தொடர்பில் பேணப்பட வேண்டிய நியதிகளை பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

26 வயதான சாமிளா கஜீதீபன், 62 வயதான செல்வநாயகி ராசமலர், 52 வயதான புவனேஸ்வரி குலசிங்கம், ஜெயக்குமாரி பாலேந்திரன், 28 வயதான நிதர்சனா, 22 வயதான ரவீந்திரன் வதனி லோகநாதன், 61 வயதான யோகராணி, 16 வயதான சசிதரன் யதுர்சனி மற்றும் 42 வயதான சசிதரன் தவமலர் ஆகியோர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் கைதிகளின் மனித உரிமைகளை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## கொலை முயற்சி இலங்கையர் கைது

தாக்குதல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் இலங்கையர் ஒருவர் இத்தாலியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு நபர்களை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சுமத்தி குறித்த நபரை இத்தாலிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

36 வயதான இலங்கையர் ஒருவரே சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தாலியின் மொன்டகல்வாரியோ பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மனைவியுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதல் இடம்பெறக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது ஆத்திரமுற்ற கணவர் மனைவியின் சகோதரர்களை கூரிய ஆயுதமொன்றினால தாக்கியுள்ளார்.

தாக்குதலில் காயடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (2)

## பால் போன்ற திரவம் விஹாரையில் சுரப்பு

(கொழும்பு)

கதிர்காமம் கிரி விஹாரையில் பால் போன்ற திரவமொன்று நேற்று சுரந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கதிர்காமம் கிரி விஹாரையில் உணவு சமைப்பதற்கான புண்ணிய காலத்தில் இவ்வாறு பால் போன்ற திரவம் சுரந்துள்ளதாக விஹாராதிபதி கொபவக்க தம்மிந்த தேரர் தெரிவித்துள்ளார்.

உணவு சமைப்பதற்கான நேரத்தில் பிரதேச மக்கள் விஹாரைக்கு பெருமளவில் வருகை தந்திருந்தனர்.

அப்போது விஹாரையின் சைத்திய பகுதியில் இவ்வாறு பால் போன்ற பொருள் சுரந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## புதுவருட விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையமும் வலி தெற்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் புதுவருட விழா எதிர்வரும் 18-ம் திகதி வெள்ளிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் 18-ம் திகதி காலை இடம்பெறவுள்ள ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் மற்றும் ஆண் பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டநிகழ்வில் பங்குபற்ற விரும்புகின்ற வீர வீராங்கனைகளை 17-ம் திகதி வியாழக்கிழமை மாலை 2 மணியளவில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பதிவுகளை மேற்கொ [illegible] (செ-11)

# கடல்வாழ் உயிரினங்களுடன் ஐந்து சீனர்கள் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கடல்வாழ் உயிரினங்களை எடுத்துச் சென்ற ஐந்து சீன பிரஜைகளை கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

வான் மூலம் இவற்றை எடுத்துச் சென்ற வேளையில், கொள்ளுப்பிட்டியில் வீதி கடமையில் ஈடுபட்டிருந்தவர்களால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சீன பிரஜைகளிடம் இருந்து உலர்த்தப்பட்ட 92 கடல் குதிரைகள், 90 கடல் அட்டைகள், 24 கடல் நத்தைகள், 70 சிப்பிகள் மற்றும் முருங்கைகல் பாறைகளின் பகுதிகள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (செ-11)

# ஆஸி செல்வதற்கு முற்பட்ட 4145 இலங்கையர்கள் கைது

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல கடல் வழியை பயன்படுத்திய 4 ஆயிரத்து145 இலங்கையர களை இலங்கை கடற் படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்லப் பயன்படுத்திய 88 ரோலர் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற் படைப்பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தியாவில் இருந்தும் இந்தோனேசியாவில் இருந்தும் சென்ற இலங்கையர்களின் புள்ளிவிபரம் இன்னும் கணக்கிடப்படவில்லை.

அத்துமீறிய குடியேற்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்த இலங்கை கடற்படையினரின் கப்பல்களுக்கு மேலதிகமாக அவுஸ்திரேலியா வழங்கும் இரு கப்பல்கள் இன்னும் 2 மாதங்களில் இலங்கை வந்து சேரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் பாதுகாக்கும் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் தான் தரகர்கள் செயற்படுகின்றனர்.

சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் எந்தவொரு உயர் அதிகாரியும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## நல்ல காலம் வருகிறது



✡ சூழ்நிலைக்குத் தக்கபடி வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றிக்கான இரகசியம்.

✡ ஒரு செயலின் பயனில் கருத்துச் செலுத்தும் அதே அளவிற்கு அதைச் செய்யும் முறையிலும் கவனம் செலுத்துவது அவசியம்.


✡ தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதை விட போராடி மாள்வதே மேலானது. நீ ஒருபோதும் அழக்கூடாது.


✡ ஒரு இலட்சியத்தை எடுத்துக் கொண்டு அதற்காக உன்னை அர்ப்பணித்துக் கொள். பொறுமையுடன் விடாமுயற்சி செய்தால் உனக்கு ஆதரவான நல்ல காலம் நிச்சயம் வரும்.

✡ சுயநலத்துடன் வாழாமல், "நான் அல்லேன் நீயே" என்னும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். எல்லா நன்மைகளுக்கும், ஒழுக்கங்களுக்கும் இதுவே அடிப்படை பண்பு.

✡ உன்னால் எல்லோருக்கும் சேவை செய்ய முடியும். அதுவும் கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் உனக்கு கிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விசுவமடு, கண்ணகிநகர் கிளி/அம்பிகை வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு, பாடசாலை அதிபர் திருமதி தங்கமலர் சண்முகநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா வெற்றி பெற்ற வீரர்களுக்கு கேடயத்தினை வழங்குவதையும் விருந்தினர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக

# பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்; சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி சம்பியன்



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

இதன் ஒரு அங்கமாக பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியின் இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகமும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இளைஞர் கழகமும் மோதியது.

முதல் பாதியாட்டம் நிறைவடைகையில் 11:3 என்னும் புள்ளிகள் கணக்கில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இளைஞர் கழகம் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இளைஞர் கழகம் போட்டி நிறைவடைகையில் 18:7 என்னும் புள்ளிகள் அடிப்படையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகத்தை வெற்றிகொண்டது.

இதன்மூலம் 2014 ஆம் ஆண்டுக்கான சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட சம்பியனாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இளைஞர் கழகம் தெரிவானது. (க-23)



# உடுவில் உதய சூரியன் வி.கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டி

## தாவடி காளியம்பாள் சம்பியன்





உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தினரால் கழகத்திற்கான முன்பள்ளி கட்டட நிதிக்காக நடத்தப்பட்ட தாச்சிப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசில் வழங்கலும் அண்மையில் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் இடம்பெற்ற இப்போட்டிகளின் இறுதிப்போட்டிக்கு புதுமடம் வைகறை அணியை வென்று மயிலிட்டி வள்ளுவர் அணியும், அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக அணியை வென்று தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியும் தகுதி பெற்றன.

முன்னதாக இடம்பெற்ற 3ஆம் இடத்திற்கான போட்டியில் புதுமடம் வைகறை அணியும் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக அணியும் மோதியது.

இப்போட்டியில் புதுமடம் வைகறை அணி 2 பழங்களைப் பெற்ற போதும் பதிலுக்கு அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக அணியால் ஒரு பழத்தையே பெறமுடிந்தது.

இதனால் இப் போட்டியில் புதுமடம் வைகறை அணி வெற்றி பெற்று 3 ஆம் இடத்தை தனதாக்கியது.

இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மயிலிட்டி வள்ளுவர் அணியும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியும் மோதியது.

ஆரம்பம் முதலே போட்டியில் ஆதிக்கம் செலுத்திய தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி 5 பழங்களைப் பெற்ற போதும் பதிலுக்கு மயிலிட்டி வள்ளுவர் அணியால் 2 பழங்களையே பெற முடிந்தது. இதன் மூலம் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தினரால் கழகத்திற்கான முன்பள்ளி கட்டட நிதிக்காக நடத்தப்பட்ட தாச்சிப்போட்டியின் இறுதிப்போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

போட்டியின் சிறந்த வீரனாக மயிலிட்டி வள்ளுவர் அணியின் விவேக் தெரிவானார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு அதிதியாக வலி. தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை தலைவர் தி.பிரகாஷ், வலி.தெற்கு இளைஞர் சம்மேளன தலைவர் செ.விஜிதரன், வலி.தெற்கு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் வல்லவகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-23)

# யாழ்.கல்வி வலயத்தில் காற்பந்தாட்ட சுற்றுப் போட்டி



யாழ். கல்வி வலய பாடசாலைகளின் காற்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற காற்பநதாட்டப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும், 17 வயதுப்பிரிவில் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய அணியும், 19 வயதுப்பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் சம்பியனாகின.

மேற்படி போட்டிகள் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

15 வயதுப்பிரிவு இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

17 வயதுப்பிரிவு இறுதிப்போட்டியில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய அணியும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதின.

இதில சென்.ஜேம்ஸ் அணி 2:1 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது. மூன்றாமிடத்தினை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

19 வயதுப்பிரிவு இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 4:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. மூன்றாமிடத்தினை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 7ஆவது இந்தியன் பிறிமியர் லீக் - 2014

## போட்டி அட்டவணை

INDIAN PREMIER LEAGUE 2014

| திகதி | போட்டி | இடம் |
|---|---|---|
| ஏப்.16 | மும்பை இந்தியன்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | அபுதாபி |
| ஏப்.17 | டெல்லி டேர்டெவில்ஸ் எதிர் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | சர்ஜா |
| ஏப்.18 | சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் | அபுதாபி |
| ஏப்.18 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் | அபுதாபி |
| ஏப்.19 | றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் எதிர் மும்பை இந்தியன்ஸ் | டுபாய் |
| ஏப்.19 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் டெல்லி டேர்டெவில்ஸ் | டுபாய் |
| ஏப்.20 | ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் கிங்ஸ் லெவின் பஞ்சாப் | சார்ஜா |
| ஏப்.21 | சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் டெல்லி டேர்டெவில்ஸ் | அபுதாபி |
| ஏப்.22 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | சார்ஜா |
| ஏப்.23 | ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் சென்னை சுப்பர் கிங்ஸ் | டுபாய் |
| ஏப்.24 | றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | சார்ஜா |
| ஏப்.25 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் எதிர் டெல்லி டேர்டெவில்ஸ் | டுபாய் |
| ஏப்.25 | சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் மும்பை இந்தியன்ஸ் | டுபாய் |
| ஏப்.26 | ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | அபுதாபி |
| ஏப்.26 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் | அபுதாபி |
| ஏப்.27 | டெல்லி டேர்டெவில்ஸ் எதிர் மும்பை இந்தியன்ஸ் | சார்ஜா |
| ஏப்.27 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் எதிர் சென்னை சுப்பர் கிங்ஸ் | சார்ஜா |
| ஏப்.28 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | டுபாய் |
| ஏப்.29 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் | அபுதாபி |
| ஏப்.30 | மும்பை இந்தியன்ஸ் எதிர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | டுபாய் |
| மே.02 | சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | ராஞ்சி |
| மே.03 | மும்பை இந்தியன்ஸ் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் | மும்பை |
| மே.03 | டெல்லி டேர்டெவில்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் | டெல்லி |
| மே.04 | றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் எதிர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | பெங்களூர் |
| மே.05 | ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | அகமதாபாத் |
| மே.05 | டெல்லி டேர்டெவில்ஸ் எதிர் சென்னை சுப்பர் கிங்ஸ் | டெல்லி |
| மே.06 | மும்பை இந்தியன்ஸ் எதிர் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | மும்பை |
| மே.07 | டெல்லி டேர்டெவில்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | டெல்லி |
| மே.07 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் சென்னை சுப்பர் கிங்ஸ் | கட்டாக் |
| மே.08 | ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | அகமதாபாத் |
| மே.09 | றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் | பெங்களூர் |
| மே.10 | டெல்லி டேர்டெவில்ஸ் எதிர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | டெல்லி |
| மே.10 | மும்பை இந்தியன்ஸ் எதிர் சென்னை சுப்பர் கிங்ஸ் | மும்பை |
| மே.11 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | கட்டாக் |
| மே.11 | றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் | பெங்களூர் |
| மே.12 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் எதிர் மும்பை இந்தியன்ஸ் | ஹைதராபாத் |
| மே.13 | சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் | ராஞ்சி |
| மே.13 | றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் எதிர் டெல்லி டேர்டெவில்ஸ் | பெங்களூர் |
| மே.14 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் | ஹைதராபாத் |
| மே.14 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் மும்பை இந்தியன்ஸ் | கொல்கத்தா |
| மே.15 | ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் டெல்லி டேர்டெவில்ஸ் | அகமதாபாத் |
| மே.18 | சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | சென்னை |
| மே.18 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | ஹைதராபாத் |
| மே.19 | ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் மும்பை இந்தியன்ஸ் | அகமதாபாத் |
| மே.19 | டெல்லி டேர்டெவில்ஸ் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் | டெல்லி |
| மே.20 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் எதிர் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | ஹைதராபாத் |
| மே.20 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் சென்னை சுப்பர் கிங்ஸ் | கொல்கத்தா |
| மே.21 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் மும்பை இந்தியன்ஸ் | சண்டிகார் |
| மே.22 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | கொல்கத்தா |
| மே.22 | சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | சென்னை |
| மே.23 | மும்பை இந்தியன்ஸ் எதிர் டெல்லி டேர்டெவில்ஸ் | மும்பை |
| மே.23 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் | சண்டிகார் |
| மே.24 | றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் எதிர் சென்னை சுப்பர் கிங்ஸ் | பெங்களூர் |
| மே.24 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | கொல்கத்தா |
| மே.25 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் டெல்லி டேர்டெவில்ஸ் | சண்டிகார் |
| மே.25 | மும்பை இந்தியன்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் | மும்பை |
| மே.27 | தகுதிகாண் ஆட்டம் 1 | சென்னை |
| மே.28 | விலகல் ஆட்டம் | சென்னை |
| மே.30 | தகுதிகாண் ஆட்டம் 2 | மும்பை |
| ஜூன்.01 | இறுதிப் போட்டி | மும்பை |

# சூதாட்ட விவகாரம் எங்களைப் பாதிக்காது



ஏழாவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் சுற்றுத்தொடர் ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள அபுதாபியில் வரும் 16-ம் திகதி தொடங்குகிறது. தொடக்க ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன.

சென்னை சூப்பர் கிங்ஸ் வரும் 18-ம் திகதி நடைபெறும் தனது முதலாவது லீக் ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை, அபுதாபியில் சந்திக்கிறது. இந்த நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் சுரேஷ் ரெய்னா கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டுக்கான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் சில புதிய வீரர்கள் இடம் பெற்று இருக்கின்றனர். இருப்பினும் நாங்கள் சமபலம் கொண்ட கலவையான அணியாக இருக்கிறோம். பிரண்டன் மக்கல்லம் எங்கள் அணியில் இணைந்து இருப்பது மிகப்பெரிய பலமாகும். மிகவும் கட்டுக்கோப்பாக பந்து வீசும் சுழற்பந்து வீச்சாளர் சாமுவேல் பத்ரீ இடம் பிடித்து இருப்பது எங்களது சுழற் பந்து வீச்சின் தரத்தை மேலும் அதிகரிக்கும். டோனி தலைமையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சிறப்பான நிலையில் உள்ளது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர் மற்றும கப்டன் மீதான சூதாட்ட சர்ச்சையால் அணியின் ஆட்ட திறனில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது. நாங்கள் தொழில்முறை வீரர்கள எந்தவிதமான நெருக்கடியும் எங்களது ஆட்டத்திறனை பாதிக்க அனுமதிக்கமாட் டோம். ஐ.பி.எல். போட்டியில் வெற்றிக்கான உத்வேகத்தை அதிகரிக்க முதல் 5 ஆட்டங்கள் மிகவும் முக்கியமான தாகும். அதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.

ஐ.பி.எல். போட்டியில் கடந்த 6 ஆண்டுகளாக கடவுள் எனக்கு நல்ல கருணை காட்டி வருவதுடன், சென்னை அணி நிர்வாகமும் என் மீது நம்பிக்கை வைத்து எனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த அனுமதித்து வருகிறது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆடுகளங்களுக்கு ஏற்ப எங்களை விரைவில் தயார்படுத்தி கொள்ள முடியும். வங்க தேசத்தில் ஆடியது போல் ஐக்கிய அரபு எமிரேட்சிலும் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வரும் ஆட்டங்களில் தான் எனது முழு கவனமும் இருக்கிறது என மேலும் ரெய்னா தெரிவித்தார். (க)

# இறுதிச்சுற்றில் தீபிகா பலிக்கல்



டெக்சாஸ் ஓபன் ஸ்குவாஷ் தொடரில், இந்திய வீராங்கனை தீபிகா பலிக்கல் அரையிறுதியில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளார்.

அமெரிக்காவின் ஹவுஸ்டன் நகரில் டெக்சாஸ் ஓபன் ஸ்குவாஷ் போட்டி நடந்து வருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் அரையிறுதியில் இந்தியாவின் தீபிகா பலிக்கலும், நடப்புச் சம்பியன் அயர்லாந்தின் மேட்லைன் பெர்ரியும் மோதினர்.

75 நிமிடங்கள் வரை நீடித்த பரபரப்பான ஆட்டத்தின் இறுதியில், தீபிகா 11:7, 11:13, 13:11, 10:12, 11:4 என்ற செட் கணக்கில் மேட்லைன்யை வீழ்த்தினார்.

இதன் மற்றொரு அரையிறுதியில் எகிப்து நாட்டின் நூர் எல் ஷெர்பினி 11:5, 11:9, 9:11, 11:6 என்ற செட் கணக்கில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த கேமிலி செர்மியை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

சம்பியன் கிண்ணத்திற்கான இறுதி ஆட்டத்தில் தீபிகா பலிக்கலும், நூர் எல் ஷெர்பினியும் பலப்பரீட்சை நடத்துகிறார்கள். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜினியின் ஆசி மோடிக்கு!

## அரசியலுக்குள் இறங்குகிறாரா சூப்பர் ஸ்ரார்?

சூப்பர் ஸ்டார் என்று அழைக்கப்படும் உச்ச நட்சத்திரமான ரஜினி. அரசியல் களத்தில் இது நாள் வரை கால் பதித்ததில்லை. ஆனால் அரசியல் அரங்கில் எப்போதுமே பேசப்படும் நபராகவே இருந்து வந்திருக்கிறார்.

1996-ம் ஆண்டில் இவர் கொடுத்த வாய்ஸ் அப்போது ஆட்சி. மாற்றத்துக்கு வழி வகுத்ததாக இப்போதும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். மூப்பனாருடன் சேர்ந்து அந்த நேரத்தில் ரஜினி எப்படியும் அரசியலுக்கு வந்து விடுவார் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் அது நடக்கவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு ரஜினி சூப்பர் ஸ்டாராகவே நடித்த குசேலன் படத்தில் "நான் அரசியலுக்கு வருவேன்னு நீங்களாகவே நினைச் சிக்கிட்டா நான் என்ன செய்றது" என்று ஒரு வசனம் இடம்பெற்றிருக்கும். அந்த படம் வந்த நேரத்தில் ரஜினியின் நிஜமான எண்ணமும் இது தானோ என்று எண்ணத் தோன்றியது.

இதன் பின்னர் ரஜினியின் படங்களில் அரசியல் சம்பந்தப்பட்ட 'பஞ்ச்' வசனங்கள் குறைந்து போனது என்றே கூறலாம்.

இந்த இடைப்பட்ட காலங்களில் நதிகளை இணைப்பதற்காக ரஜினி ஒருநாள் உண்ணாவிரதமும் இருந்துள்ளார்.

1996-ம் ஆண்டுக்கு பின்னர் ஒவ்வொரு தேர்தலிலும் ரஜினியின் 'வாய்ஸ்' யாருக்கு என்கிற எதிர்பார்ப்பு ஏற்பட தொடங்கியது.

தி.மு.க.- த.மா.கா. கூட்டணிக்கு வாய்ஸ் கொடுத்த ரஜினி, இதன் பின்னர் வந்த ஒரு தேர்தலில் பா.ஜனதாவுக்கு ஆதரவு தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ரஜினியை பார்க்கும் போதெல்லாம் பத்திரிகையாளர்கள் கேட்கும் கேள்வி இதுதான் "சார் எப்போது அரசியலுக்கு வருவீர்கள்? இதற்கு அவர் "எல்லாம் அந்த ஆண்டவன் கையில் இருக்கிறது" என்பது போலவே பதில் அளித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் நாடு முழுவதும் மோடி அலை வீசி வரும் நிலையில், தமிழகத்தில் ரஜினியின் ஆதரவை எப்படியும் பெற வேண்டும் என்பதில் பாரதீய ஜனதா கட்சியினர் பகீரத முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.



தமிழக பா.ஜனதா தலைவர்கள், தொடர்ந்து பல முறை ரஜினியிடம் ஆதரவு கேட்டு வெளிப்படையாகவே பேட்டி அளித்தனர். நாட்டின் நலன் கருதி பாரதீய ஜனதா கூட்டணிக்கு ரஜினி, ஆதரவளிக்க வேண்டும் என்று அக் கட்சி தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் ரஜினி, தொடர்ந்து மௌனமாகவே இருந்து வந்தார்.

இந்நிலையில் தமிழக அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் சென்னைக்கு பிரசாரத்துக்காக வந்த பா.ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி போயஸ் கார்டனில் உள்ள ரஜினியின் வீட்டுக்கு சென்று அவரை சந்தித்து பேசினார். அப்போது இருவரும் 40 நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

பின்னர் நிருபர்களிடம் பேசிய ரஜினி, மோடியை புகழ்ந்து தள்ளினார். மோடி உறுதியான தலைவர், தகுதியான நிர்வாகி. வருங் காலத்தில் அவர் என்ன நினைக்கிறாரோ (பிரதமர் பதவி) அதில் வெற்றி பெற வாழ்த்துக்கள்" என்று தனக்கே உரிய பாணியில் ரஜினி கூறினார்.

இந்த சந்திப்பின் போது அரசியல் பற்றி எதுவும் பேசவில்லை என்று ரஜினி கூறினாலும், மோடியை அவர் பாராட்டி பேசியிருப்பது தமிழக அரசியல் களத்தில் கூடுதல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மோடிக்கு ரஜினி பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்திருப்பது அக்கட்சியினரிடையே மட்டுமின்றி கூட்டணி கட்சி தொண்டர்கள் மத்தியிலும் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரஜினி, தங்களது அணிக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்து விட்டது போலவே அவர்கள் உணர்கிறார்கள். மோடி அலையுடன், ரஜினியின் பாராட்டு அலையும் சேர்ந்து தமிழகத்தில் பா.ஜனதா அணிக்கு வலிமை சேர்க்குமா? பொறுத்திருந்து பார்ப்போம். (செ-11)

## உள்ளக விசாரணைகளில்....

சர்வதேச விசாரணை நடத்தும் முயற்சியில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் முக்கிய பங்காற்றினார்.

சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் நிலையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும். பொதுநலவாய நாடுகள் பிரகடனங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும் அப்போது உறுப்பு நாடுகள் குற்றச் செயல்கள் குறித்து விழிப்படைந்த நிலையில் இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

கிலாஸ்கோவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளமையை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நடத்தப்படவுள்ள விசாரணைகளை நிராகரித்த காரணத்தினாலேயே இலங்கை விஜயத்தை இறுதி நேரத்தில் ரத்து செய்தோம் என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் செரோன் ஹொட்க்சன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்திருந்தது.

பிரபல கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சில பிரித்தானியா பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தனர்.

எனினும், இந்த விஜயம் இறுதி நேரத்தில் ரத்து செய்யப்பட்டது.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே தமது நீண்ட கால கோரிக்கை எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால் இலங்கை அரசு சர்வதேச விசாரணையை நிராகரித்து வருவதன் மூலம் அப்பாவி மக்களிற்கு நியாயம் கிடைக்கும் என்பதில் நம்பிக்கை தன்மை இல்லை எனவே இலங்கை விஜயத்தை இரத்து செய்கிறோம் என ஹொட்க்சன் தெரிவித்துள்ளார்.

(செ-11)

## ஊடகவியலாளர்...

நேற்றிரவு 8 மணியளவில் அல்வாய் கிழக்கில் உள்ள தாய் வீட்டிலிருந்து சிறுப்பிட்டியில் உள்ள தனது வீட்டினை நோக்கி பிரஸ்தாப ஊடகவியலாளர் மோட்டார் சைக்கிளில் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அப்போது இவரை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத இருவர் வல்லைப் புறாப்பொறுக்கிச் சந்திக்கு அருகில் வைத்து ஊடகவியலாளரிடம் பேச்சுக் கொடுத்துள்ளார்.

நீ ஊடகவியலாளரா? எனக் கேட்ட அவ் இருவரும் திடீரென மறைத்து வைத்திருந்த இரும்புக் கம்பியை வெளியில் எடுத்து செல்வதீபனின் தலையில் தாக்கியுள்ளனர்.

ஹெல்மெட் அணிந்திருந்ததால் சுதாகரித்துக் கொண்ட தீபன் அவர்களிடமிருந்து தப்பிச் செல்ல முயன்று மோட்டார் சைக்கிளை ஆர்முடுக்கிச் செல்ல முற்பட்டுள்ளார். அப்போது அவரை விடாது துரத்திய மர்ம நபர்கள் ஊடகவியலாளரின் இடுப்புப் பகுதியில் இரும்புக் கம்பியால் இரு முறை தாக்கியுள்ளனர்.

தாக்குதலால் நிலை குலைந்து மோட்டார் சைக்கிளுடன் தரையில் விழுந்த ஊடகவியலாளர் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அருகில் இருந்த பற்றைகளுக்கு ஊடாக தப்பித்து ஓடியுள்ளார்.

ஊடகவியலாளரைத் தாக்கிய தாக்குதலாளிகள் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அடித்து உடைத்து சேதப்படுத்திவிட்டு தமது மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளனர்.

பின்னர், படுகாயமடைந்த செல்வதீபன் தனது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து உதவிக்கு அழைத்துள்ளார்.

அதன்பின் சம்பவ இடத்திற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிந்து அப்பகுதியில் விசாரணை மற்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

படுகாயமடைந்த பிரஸ்தாப ஊடகவியலாளர் உறவினர்களின் உதவியுடன் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்றிரவு வைத்தியசாலைக்குச் சென்ற நெல்லியடிப் பொலிஸார் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளரிடம் வாக்கு மூலம் பெற்றுச் சென்றுள்ளனர்.

(செ-60)

## வலி வடக்கில்...

இராணுவக்கட்டளைத்தளபதியிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் அதனைத் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 1200 இற்கு மேற்பட்ட குடும்பங்களை வளலாய் உள்ளிட்ட இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது. அதேவேளை காணியற்றவர்களுக்கு காணி வழங்கி அங்கு அந்த மக்களை குடியமர்த்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்ததாக கூறி நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்ந்து வரும் மக்கள் அனைவருக்கும் வலிகாமம் வடக்கில் சொந்தக் காணிகள் இருப்பதற்கான உரிய ஆவணங்களோ, ஆதாரங்களோ இல்லை. எனவே அந்த மக்களை வேறு இடங்களில் குடியமர்த்த இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என உதயபெரேரா மேலும் கூறியுள்ளார்.

வலிகாமம் வடக்கில் எனிமேல் மீள்குடியேற்றம் எப்போதும் சாத்தியப்படாது என்று யாழ்.மாவட்ட இராணுவக்கட்டளைத்தளபதி முன்னர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-[illegible])

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

THE ONLY OFFICIAL FRENCH CENTRE.

FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

af

af Alliance Française de Jaffna

திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium... செல்வோர் மற்றும் French கற்கவிரும்புவோர். யாழில; AF 1976 முதல் இயங்கிவருகிறது.

- உலகில் FRENCH கற்பதற்கு FRENCH அரசாங்கம் அங்கீகரிக்கும் சர்வதேச நிறுவனம் AF. இலங்கையில் கொழும்பு. கண்டி. காலி. மாத்தறை ஆகிய இடங்களில் கிளைநிறுவனங்களைக் கொண்டு உலகப் புகழ் பெற்ற நிறுவனமாக FRENCH EMBASSY இன் கீழ் இயங்குகின்றது.
- வருடம்தோரும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) இங்கு படிக்கிறார்கள்.
- Certificates & International Diplomas

புதிய வகுப்புகள் மிக விரைவில்...உடன் பதிவுசெய்யுங்கள்...

61, கச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம் 021 222 8093

(இவ்வீதியில் கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் உள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

(6124)

## இளம்பெண்...

பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

யாழ்ப்பாணம் பெரியகோயிலுக்கு பின்புறமாக சென்.பற்றிக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இந்தப்பெண் குருநகர் அடப்பன்றோட்டை சேர்ந்த ஜெரோமி கொன்சலிற்றா (வயது 22) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கிணற்றில் தலைகுப்புறவாக மிதந்தபடி காணப்பட்ட மேற்படி பெண்ணின் சடலத்தை நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் கண்டுள்ளனர். இதனையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## மீளவும் புலிகள்?...

இதற்கு கோபி மற்றும் அவரது உதவியாளர்களிடம் இருந்து மீட்கப்பட்ட இரண்டு செய்மதி தொலைபேசிகளின் மூலம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களை திரட்டியுள்ளதாகவும் கூறுகின்ற கொழும்பு ஊடகம், கோபியின் மரணம் புலம்பெயர் தமிழ் சமூகத்தில் பெரும் குழப்ப நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது: (செ-11)

## தீக்குளித்த ...

தற்கு நல்ல அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனார்த்தனன் குறைந்தது மூன்று மாதங்கள் மருத்துவமனையில் இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பதாகவும், அவர் இங்கே அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாகத் தங்க அனுமதி கிடைக்குமென்று நம்புவதாகவும் ட்ரெவர் கிராண்ட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய குடியேற்ற துறையிடமிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட வேண்டும் என்று கடிதம் அவருக்கு கிடைத்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் இறப்பதை விட, அவுஸ்திரேலியா இறக்கலாம் என்று முடிவு செய்து தற்கொலைக்கு முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனையில் உள்ள ஜனார்த்தனனை பார்வையிட அவரது தாயார் மற்றும் சகோதரருக்கு அவுஸ்திரேலியா விசா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ் உறவுகளின் உதவியில் அவர்களுக்கான பயணச் செலவு ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org